25th February 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 20 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com

## தந்தையாகிய சஜித் குவியும் வாழ்த்துக்கள்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தந்தையாகிய செய்தி நாடெங்கும் பரவலாக பேசப்படுகிறது. 02ம் பக்கம்பார்க்க...

# கிழக்கு காணி பிரச்சினைகளை தீர்த்து வைக்க நடவடிக்கை:

## காணி அமைச்சர், சட்டமா அதிபருடன் விரைவில் பேச்சு

### நீதியமைச்சர் விஜேதாச மட்டுவில் தெரிவிப்பு



கிழக்கு மாகாணத்தில் யுத்தகாலத்திற்கு பின்னர் சட்டவிரோதமாக அரச காணிகள் பயன்படுத்தப்பட்டிருந்தால் அதற்கான தீர்வினை பெற்று கொடுப்பதற்கு காணி அமைச்சருடனும் சட்டமா அதிபருடனும் பேச்சுவார்த்தை நடத்துவதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.மட்டக்களப்பு கச்சேரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இவ்வாறு கருத்து  தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு அரச செயலகத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.யுத்தத்தின் பின் கிழக்கு மாகாணத்தில் காணிகளை சட்டவிரோதமாக பயன்படுத்தி இருந்தால் அது தொடர்பாக காணி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்து நிவாரணங்களை பெற்று கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் இது தொடர்பாக நடைபெற்ற கூட்டமொன்றில் பிரதேச செயலாளர்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து அமைச்சர் இதனை தெரிவித்தார் .காணி தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு இருக்கும் சட்ட அதிகாரம் தொடர்பாக அமைச்சர் பிரதேச செயலாளர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

கிழக்கு மாகாணத்தில் காணி பிரச்சினை மிக பாரதூரமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.இக்கூட்டத்தில் காணி பிரதி அமைச்சர் அனுராதா ஜெயரத்ன மற்றும் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் உட்பட பல பாராளுமனற உறுப்பினர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## பிரதியமைச்சர் வக்கும்புறவுக்கு ஜனாதிபதி வழங்கிய இரு ஆலோசனைகள்



சுற்றாடல் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட ஜனக வக்கும்புர 02ம் பக்கம்பார்க்க...

## 8 பாடசாலைகளை உள்வாங்கி புதிய கொத்தணி முறைமை

### இறுதி முடிவு இவ்வாரம் எட்டப்படும்

### கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு



பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் வகையில் கல்வி அமைச்சு கொத்தணி பாடசாலை முறையை அறிமுகப்படுத்தவுள்ளது.

8 பாடசாலைகளை உள்ளடக்கி கொத்தணி பாடசாலை முறை அறிமுகப்படுத்தப்படுமென கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பிரதேசத்தின் முன்னணி 02ம் பக்கம்பார்க்க...

## இந்திய நாடாளுமன்ற தேர்தல்: முஸ்லிம் லீக்கில் நவாஸ் கனி போட்டி

### ஸ்டாலின், காதர் முகைதீன் ஒப்பந்தம்!





(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

திமுக கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு மீண்டும் ராமநாதபுரம் தொகுதி ஒதுக்கீடு செய்யபபட்டுள்ளது. திமுக 02ம் பக்கம்பார்க்க...

## கல்வி வள நிலையமாக மாறும் மயோன் முஸ்தபாவின் வீடு



முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபா சாய்ந்தமருது இல்லத்தை பொதுத் தேவைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவது தொடர்பிலான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் நேற்று 02ம் பக்கம்பார்க்க...

## சட்டத்தரணிகள் தேர்தலில் கஸாலி ஹுஸைன் போட்டி

2025 ஆம் ஆண்டின் சட்டத்தரணிகள் சங்கத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சிரேஷ்ட சட்டத்தரணி கசாலி உசைன் முன்வந்துள்ளார். 02ம் பக்கம்பார்க்க...




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## கல்வி...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

வெள்ளிக்கிழமை (23) இரவு அவரது புதல்வரும் மயோன் குறூப் நிறுவனத்தின் தவிசாளருமான றிஸ்லி முஸ்தபா தலைமையில் நடைபெற்றது.

நாடு, சமூகம் மற்றும் பிராத்திய முன்னேற்றம் தொடர்பில் அதிக கரிசனையுடனும் தூரநோக்கு சிந்தனையுடனும் தனது பொருளாதாரத்தை அர்ப்பணிப்பு செய்து பல்வேறு சமூக நலத் திட்டங்களை இன, மத, பிரதேச பாகுபாடின்றி முன்னெடுத்திருந்த மர்ஹூம் மயோன் முஸ்தபா அவர்கள் இளம் தலைமுறையினரின் கல்வி மற்றும் அவர்களது எதிர்காலம் குறித்து கடுமையாக சிந்தித்து, செயலாற்றி வந்திருந்தார்.

அன்னாரது உயரிய எண்ணங்களை நிறைவேற்றும் பொருட்டு, சாய்ந்தமருது மாவடி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தை, அவரது வஸியத்திற்கு அமைவாக பொதுத் தேவைகளுக்காக வக்பு செய்வதற்கு அவரது புதல்வர்களான றிஸ்லி முஸ்தபா, றம்லி முஸ்தபா, புதல்வியான றிஸ்னா முஸ்தபா, சகோதரரான கணக்காளர் எம்.எம். இப்றாஹிம் மற்றும் மருமகன் செய்ன் மர்சூக் ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

இதன் பிரகாரம் ட்ரஸ்ட் எனும் நம்பிக்கையாளர் சபை ஒன்றை ஏற்படுத்தி சமூக நலத் திட்டங்களுக்கு அந்த இல்லத்தை பயன்படுத்துவதற்கான ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாக இக்கூட்டத்தில் றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

இதையடுத்து பலரது பல்வேறுபட்ட கருத்துகளும் ஆலோசனைகளும் பரிசீலிக்கப்பட்ட நிலையில், ஆலழறெ ஆரளவாயகய Education Resource Centre எனும் பெயரில் தொழில் வழிகாட்டலுடன் கூடிய கல்வி வள நிலையமொன்றை அமைப்பது தொடர்பிலான யோசனைகள் முன்னிலைப்படுத்தப்பட்டன.

குறிப்பாக பாடசாலைக் கல்வியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யத் தவறுகின்ற மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளையும் தகவல் தொழில்நுட்பக் கல்வியையும் கற்பித்து, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிறந்த தொழில் வாய்ப்புகளை பெறுவதற்குத் தகுதியான தேர்ச்சிமிக்க நபர்களாக அவர்களைக் கட்டியெழுப்புவதற்கான கல்வித் திட்டமொன்றை அங்கு நடைமுறைப்படுத்துவது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சாய்ந்தமருது ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா மௌலவி, பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், சுங்கத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஏ.ஜெலீல், பாடசாலை அதிபர்களான யூ.எல்.நஸார், எஸ்.எம்.சம்சுதீன், ஓய்வுபெற்ற அதிபர்களான எம்.எம்.இஸ்மாயில், ஐ.எல்.ஏ.மஜீத்,

## பாடசாலைகளை...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*பாடசாலை ஒன்றின் அதிபர் இத கொத்தணி பாடசாலைகளின் பிரதம இணைப்பாளராக பணிபுரிவார்.*

*பாடசாலைகள் எதிர்நோக்கும் ஆசிரியர் பிரச்சினை ,கட்டிட பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய வகையில் இக்கொத்தணி பாடசாலைகள் 220 பாடசாலைகள் பிரதான பாடசாலைகளாக தெரிவு செய்யப்படும் அதேவேளை வலயக் கல்வி பணிப்பாளர் கொத்தணி பண்டசாலைகளை தெரிவு செய்வார்.*

*இது தொடர்பான இறுதி தீர்மானங்கள் எடுப்பதற்காக கல்வி அமைச்சர் மாகாண ஆளுநர்களையும் மாகாண பிரதம செயலாளர்களையும் இவ்வாரத்தில் சந்திக்கவுள்ளார்.*

## நாளை...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*கூட்டணியில் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சி மற்றும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆகிய கட்சிகளுக்கு தலா ஓர் இடம் ஒதுக்கப்பட்டது. இதற்கான தொகுதிப் பங்கீடு சனிக்கிழமை இரவு கையெழுத்தானது.*

*தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் அவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள்.*

*மாநிலங்களவை உறுப்பினர் கோரிக்கை குறித்து உரிய நேரத்தில் ஆலோசனை செய்யப்படும்.இந்த பேச்சுவார்த்தையில் மாநில பொதுச் செயலாளர் முகம்மது அபுபக்கர், மாநில பொருளாளர் ஷாஜஹான், தேசிய செயலாளர் அப்துல் பாசித், மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் ஆடுதுறை ஷாஜஹான்,*

*திமுக பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், ஆர்.எஸ். பாரதி, திருச்சி சிவா, துறைமுகம் காஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.*

*இது தொடர்பாக திமுக தலைமை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: "மக்களவைத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் - இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சியும், மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக (24.2.2024) சனிக்கிழமை இரவு தொகுதி உடன்பாடுகள் குறித்து திமுக, இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சியும் கலந்து பேசியதில் தி.மு.க. கூட்டணியில் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிடுவது தீர்மானிக்கப்பட்டது. பிற கூட்டணிக் கட்சிகளின் இறுதி தொகுதிப் பங்கீட்டுக்கு உட்பட்டு இப்பட்டியல் உறுதி செய்யப்படும்.*

*அதேபோல, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு நாமக்கல் தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அக்கட்சி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும். முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தலைவர் காதர் மொய்தீன் தொகுதி உடன்பாட்டில் கையெழுத்தானது. இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் கூறியதாவது :*

*ராமநாதபுரம் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் நவாஸ் கனியே மீண்டும் போட்டியிடுவார்.நவாஸ் கனிதான் போட்டியிடுவார் என்பதை பொதுக்குழுவில் அறிவிப்போம். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி அகில இந்திய கட்சி என்பதால் ஏணி சின்னத்திலேயே போட்டியிடுவோம் இவ்வாறு கூறினார். கடந்த முறை திமுக கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட்டது. கடந்த முறை போட்டியிட்டு வென்ற ராமநாதபுரம் தொகுதியிலேயே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி மீண்டும் போட்டியிடுகிறது.*

## தந்தையாகிய...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*நீண்ட காலமாக குழந்தைப் பாக்கியமின்றி இருந்த சஜித் தம்பதிக்கு பிள்ளை கிடைத்தமை மறைமுகமாகவே இருந்தது. பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிரி பத்திரிகையாளர் சந்திப்பொன்றின் போது சஜித் பிரேமதாச மாலை நேரங்களில் தனது குழந்தையுடன் கொஞ்சி விளையாடுவதாக தெரிவித்த கருத்தையடுத்தே இந்த விஷயம் வேளிச்சத்துக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து சஜித் பிரேமதாச தம்பதிக்கு அரசியல் கட்சி பேதமின்றி வாழ்த்துக்கள் வந்து குவிந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.*

## பிரதியமைச்சர்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*தனது நியமனத்தை பொறுப்பேற்றுக் கொண்டபின் கையொப்பமிடுவதற்கு பேனை ஒன்றினை தேடினார்.அன்று அவர் பேனை கொண்டு செல்ல மறந்ததினால் உடனடியாக அங்கிருந்த ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தன்னிடமிருந்த ஒரு பேனாவை வழங்கி இராஜாங்க அமைச்சருக்கு கையொப்பமிட உதவினார்.*

*பதவியேற்பு நிகழ்வு முடிந்து வெளியே செல்லும் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இராஜாங்க அமைச்சர் வக்கும்புரவிற்கு இப்படியான ஒரு ஆலோசனையை வழங்கினார்.*

*அதாவது ஒருவர் ஒரு போதும் சில நிகழ்வுகளின் போது பேனை எடுத்துக்கொண்டு வர மறக்கக்கூடாது.*

*இரு சந்தர்ப்பங்களில் பேனை கட்டாயம் கையில் இருக்க வேண்டும். ஒன்று பதவியேற்கும் போது கையொப்பமிடுவகதற்கு கையில் பேனை கண்டிப்பாக இருக்க வேண்டும்.*

*இரண்டாவதாக திருமண பதிவின் போது கையில் பேனை கட்டாயமாக இருக்க வேண்டும் என ஆலோசனை கூறி அனுப்பினார்.*

## சட்டத்தரணிகள்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*40 வருடங்களுக்கு மேலான சட்டத்துறை அனுபவமுள்ள இவர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் 11 வருடங்கள் பணிபுரிந்தவராவார். வக்குப் சபையிலும் காரிகள் மேன்முறையீட்டு மன்றத்திலும் அங்கத்தவராக பணிபுரிந்த இவர் மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கத்தவராகவும் பணிபுரிந்துள்ளார்.*

*சர்வதேச புலமைச் சொத்து ஆலோசனை சபை அங்கத்தவராகவும் இவர் பணிபுரிந்துள்ளார்.சிவில் கிரிமினல் வழக்குகளில் ஈடுபாடு காட்டி வரும் கசாலி உசைன் அவர்கள் கொழும்பிலும் கொழும்பின் வெளியிலும் பல வழக்குகளை பேசி வருகின்றார்.சட்டத்தரணிகள் சங்கத்தில் தீவிர அங்கத்தவரான இவர் அதன் செயற்குழு அங்கத்தவராகவும் பனி புரிந்துள்ளார் .*

*கொழும்பில் வசித்து வரும் இவர் 2025 ஆம் ஆண்டின் சட்டத்தரணிகள் சங்கத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கசாலி உசைன் முன்வந்துள்ளார்.*






# மதுரங்குளி விருதோடை அல்-ஜாமியத்துல் அஸீஸிய்யா கலாபீடத்தில் புதிய மாணவர் மற்றும் விருந்தினர் விடுதிக்கான அடிக்கல் நடும் விழா





(பீ.எம்.முக்தார்)

பெற்றோரை இழந்த எமது பிள்ளைச் செல்வங்களுக்கு சிறந்த மார்க்க அறிவுடனான கல்வியைப் பெற்றுக் கொடுக்க உதவுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தர்மமாகும்.

சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக கை கொடுப்பது நிலைபேரான தர்மமாகும் என தர்ஹா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் தெரிவித்தார்.

மதுரங்குளி விருதோடை அல்-ஜாமியத்துல் அஸீஸிய்யா கலாபீடத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மாணவர் மற்றும் விருந்தினர் விடுதிக்கான அடிக்கல் நடும் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கலாபீட ஸ்தாபகர் சங்கைக்குரிய பழீலத்துஷ் ஷெய்கு அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி அர்ரிபாயீ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சராஆ கவுன்ஸில் தலைவரும் மூத்த உலமாவுமான மௌலவி அல் உஸ்தாத் ஹஸ்புல்லாஹ் அப்துல் காதர் (பஹ்ஜி) துஆப் பிரார்த்தனை நடத்தினார்.

பஸீஸிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம். அப்துல் வாஹித் (பஹ்ஜி) உட்பட கலாபீட விரிவுரையாளர்கள், அல் பாஸ் சர்வதேச பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்கள் மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் கலாநிதி நஜீப் ஹாஜியார் மூத்த உலமாவான மௌலவி ஹஸ்புல்லாஹ் அப்துல் காதரை பொன்னாடை போத்தி கௌரவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

பெற்றோரை இழந்த பிள்ளைகளை நாம் எல்லா துறைகளிலும் கை தூக்கி சமூகத்திற்கும் ஊருக்கும் நாட்டிற்கும் உகந்த நற்பிரஜைகளாக மாற்ற வேண்டும்.





இன்றைய சிறுவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள். அவர்களுக்கு சீரான கல்வியைப் பெற்றுக் கொடுத்து உலமாக்களாகவும், வைத்தியர்கள் ஆகவும், பொறியியலாளர்களாகவும், சட்டத்துறை நிபுணர்களாகவும் உருவாக்க வேண்டும். பெற்றோர்களை இழந்த பிள்ளைகளை பராமரிப்பது சிறந்த பணியாகும், விருதோடை அஸஸீஸிய்யா கலாபீடம் இப் பணியை செவ்வனே முன்னெடுத்துள்ளது. மார்க்கக் கல்வியையும், உலகக் கல்வியையும், தொழில் கல்வியையும் எமது பிள்ளைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆன்மீகக் கல்வி உலகக் கல்வி மேம்பாட்டுக்கு கைகொடுப்பதானது நிறைபேறான ஓர் தர்மமாகும். தர்கா நகரில் நாம் கல்வித்துறை மேம்பாட்டுக்காக ஓர் கல்வி நிலையத்தை ஸ்தாபித்துள்ளோம்.

முஸ்லிம்கள் மத்தியில் நேரத் திட்டமிடல் மிக முக்கியமானதாகும்.

நாம் ஐவேளை தொழுகையை சரியான நேரத்திற்கு நிறைவேற்றுகிறோம். அதே போல் எமது எல்லா காரியங்களிலும் நேரத் திட்டமிடல் மிக அவசியமாகும் என்றார்.

முஸ்லிம் சமூகத்திற்கு தலைசிறந்த புத்திஜீவிகளை உருவாக்கிக் கொடுக்க சங்கைக்குரிய அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா ஆற்றி வரும் தியாகப்பூர்வமான பணிகளையும் அவர் பெரிதும் பாராட்டினார்.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 FEBRUARY 25 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இலங்கை ஈரான் உறவு உச்ச கட்டத்தில்

ஈரான் குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பினைமேலும்வலுப்படுத்தும்நோக்கில்இருநாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஈரானின் வெளிவிவகார அமைச்சர் ஹுஸைன் அமீர் அப்துல்லாஹியன் தலைமையிலான உயர் மட்ட தூதுக்குழுவின் விஜயம் அமைந்துள்ளது.

இந்த ஈரானின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரைசந்தித்துபேச்சுவார்த்தைநடத்திஉள்ளதோடு, சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமையும் புறம்பாக சந்தித்து உரையாடியுள்ளார். எமது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் அழைப்பில் இலங்கை வந்த ஈரான் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான தூதுக்குழு இலங்கைக்கு பொருளாதார ரீதியில் உதவக்கூடிய பல விடயங்களில் இணக்கம் கண்டுள்ளன. பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தை விரைவில் கூட்டுவதற்கும் இரு நாடுகளும் இணக்கம் கண்டு இருப்பது முக்கியமானதாகும். வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் காணப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவேற்பை தெரிவித்தாக வெளிவிவகார அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி அலி கமேனிக்கு இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை விடுதுள்ள அழைப்பு பற்றியும் இவ் விஜயத்தின் போது ஆராயப்பட்டுள்ளது. ஈரானின் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு வரும் முதலாவது விஜயம் இதுவாக அமையலாம். முஸ்லிம் உலகத்திலே முக்கிய நாடாக திகழும் ஈரானின் தலைவர் வருவது அதி முக்கியமான விஜயமாக இருக்கும்.

மாகாணத்தில் அமுல்படுத்தப்படும் உமா ஓயாத் திட்டம் ஈரானின் உதவியினாலே மேற்கொள்ளப்படுகின்றது. விரைவில் நூறு மெகா வாட் சக்தி வாய்ந்த மின்னாலை ஒன்றை மேற்கொள்வதற்கும் ஈரான் முன் வந்துள்ளது.

ஈரான் இலங்கை பொருளாதார ஒத்துழைப்புக்களின் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கும் வகையில் செயற்பாடுகளை இலங்கை முன்னெடுத்து வருகின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈரான் அமைச்சர் அப்துல்லாஹியானிடம் தெரிவித்துள்ளார்.

இதன்போது நாடுகளுக்கு இடையில் கலாச்சார தொடர்புகளை பலப்படுத்தும் அவசியத்தையும் ஈரான் அமைச்சர் கலந்துரையாடலின் போது தெரிவித்தார். ஈரானுடன் காணப்பட்ட இணக்கப்பாடுகளை அமுல் படுத்துவதற்கு வெளிவிவகார அமைச்சு குழு ஒன்றை நியமித்ததன் மூலம் இவ் இணக்கப்பாடுகளை விரைவில் அமுலுக்கு கொண்டுவர முடியும்.



இர்பான் இக்பால்



# பேசப்படாத நியாயங்கள்: விதி - விலக்கு!

கொரோனா பெருந்தொற்று காலப் பகுதி, உலகை முழுமையாக ஆட்டிப் படைத்ததை இன்றைய தலைமுறையினர் மறக்க மாட்டார்கள். இக்காலப்பகுதியில், இணையத் தொழிநுட்ப வளர்ச்சி, பெருமளவு பிரச்சினைகளுக்கு ஏதோ, சொல்லத் தக்க வைகயில் தீர்வாக இருந்தது. ஆயினும், தொழிற்தேவைகளுக்கு அப்பால், நடைமுறை, இயல்பு வாழ்க்கையில் பல நாடுகள் தொடர்ச்சியாக எதிர்நோக்கி வந்த பொருளாதாரச் சிக்கல்கள், பிரஜைகள் மத்தியில் வெறுப்பை விதைத்து வந்ததையும் சுட்டிக்காட்டியாக வேண்டும். மாற்றுத் தெரிவுகள் இருந்தவர்கள் போக, வேறு தெரிவே இல்லாதவர்கள், ஏசியோ - பேசியோ நாட்டிலேயே வாழ்ந்தாக வேண்டும் என்றிருந்து விட்டனர். தெரிவிருந்தவர்கள், மிக அதிகமாகக் கவலைப் பட்டனர், விமர்சித்தனர், மாற்று வழிகளை முற்படுத்தினர்.

குறிப்பாக, இலங்கையில் எரிபொருள் பிரச்சினை தலையெடுத்து, மட்டுப்படுத்தப்பட்ட அளவே எரிபொருள் பெற முடியும் என்ற சூழ்நிலை உருவான போது, பென்ஸ் காரில் ஓடிக் கொண்டிருக்கும் நான் பெற்றோலுக்கெல்லாம் வரிசையில் நிற்பதா? என்று சலித்துக் கொண்டவர்கள் இருந்தார்கள். அத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும், 200 லீற்றர் பெற்றோல் வேண்டுமானாலும், எடுத்து வைக்கிறோம் வாருங்கள், எந்த இடத்துக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பயணிக்கலாம் என்று வாக்குறுதியளித்தவர்களும் இருந்தார்கள். இது, நாட்டிலுள்ள சமமற்ற இயல்பை வெளிப்படுத்தியது. இந்த வழிகள் எதுவும் அறியாதவர்கள், விடிய விடிய வரிசையில் காத்திருந்து, புதிய சாதாரணத்தை பழகிக் கொண்டார்கள்.

எனினும், இக்காலப் பகுதியில், தெரிவிருந்த காரணத்தினால், மாற்று வழியை நாடிக் கொண்டவர்கள் எல்லாம், பின் வந்த காலத்தில் அதன் பயனை அனுபவித்துக் கொண்டார்களா? என்பதே இவ்வாரம் பேச விளையும் விடயம். ஐக்கிய இராச்சியத்திலும், இலங்கையிலும் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டிருந்த ஒரு குடும்பம் 2015 காலப்பகுதியில், நாட்டுக்கே மீண்டும் சென்று வாழப் போகிறோம் என்று நிரந்தரமாக வாழும் நோக்குடன் மீண்டும் இடம்பெயர்ந்திருந்தார்கள். ஆயினும், கொரோனா சிக்கல்களின் பின்னர், மீண்டும் நாட்டை விட்டு குடும்பத்துடன் வெளியேறி, ஐக்கிய இராச்சியத்தில் குடியேறி விட்டார்கள்.

எழுதுவது போன்று, அத்தனை சாதாரண விடயமன்று இது. ஏனெனில், குழந்தைகளுடன் இவ்வாறு இடம்பெயரும் போது, அது மேலதிக சுமைகளைக் கொண்டது. குழந்தைகளுக்கான பாடசாலைத் தெரிவு, தொழில் மற்றும் செலவீனங்களை சமாளிப்பதற்கான வழிமுறைகள் என பல சவால்களுக்கு முகங்கொத்தாக வேண்டும். இருந்தாலும், அத்தனையையும் தாண்டி இவ்வாறு மீண்டும் இடம்பெயர்ந்த ஒரு குடும்பம், இந்த வாரத்திலிருந்து தமது முடிவின் விளைவுகளைத் தாங்க முடியாத மன உளைச்சலில் இருப்பதைக் காணக் கிடைத்தது.

பல தலைமுறைகளாக, மத்திய கிழக்குக்குத் தொழில் வாய்ப்புக்காக செல்வதை மிகப் பெரும் அடைவாகக் கொண்டு வாழும் கலாச்சாரம் இன்னும் நம் சமூகத்தினர் மத்தியில் இருக்கிறது. அதனையும் தாண்டி, வசதி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளக் கூடியவர்கள், யு.கே, கனடா, அமெரிக்கா, ஜேர்மனியென தமது பார்வையைத் திருப்புகின்றனர். அதிலும், குறிப்பாக, இலங்கைக்கு மிகவும் பரீட்சயமான - நெருக்கமான, ஐக்கிய இராச்சியம் பலருக்கு முதற் தெரிவு.

காலத்துக்குக் காலம், இலங்கையிலிருந்து கணிசமான மக்கள் ஐக்கிய இராச்சியத்துக்குக் குடியேறும் வழக்கம் வருகிறது. குறிப்பாக 2005 முதல் 20015 வரையான காலப்பகுதியில் கணிசமான மாணவர் வருகை இடம்பெற்றது. ஆடிப்படையில், கல்வி கற்பது நோக்கமில்லையாயினும்,. இதனை ஒரு வழி முறையாகப் பயன்படுத்தி ஒரேயடியாக இவ்வாறு பயன்பெற முனைவதன் விளைவே இது. அது போல, தற்காலத்தில், சுகாதார சேவைக்கான விசா, மற்றும் தனியாரின் சிறு நிறுவனங்களில் பணி புரிவதற்கான விசா என சில குறுக்கு வழிகள் நாடப்படுகிறது. முன்னேற வழியிருப்பின் அதை நாடுவதில் தவறில்லை. ஆயினும், அதற்கான முதலீடு பயனுள்ளதா? என்று அலசி ஆராய்ந்து, அதற்கான முடிவெடுப்பது அவசியப்படுகிறது.

ஏன்? என்ற கேள்விக்கு நிறையவே பதிலிருக்கிறது. எனினும், மிகச் சுரக்கமாக சொல்வதாக இருந்தால், இரண்டு உதாரணங்களை முன் வைக்கலாம். முதலாவது, போதிய வருமானம் தந்த, நண்டுப் பண்ணை மற்றும் வீடு வளவுகளை விற்று விட்டு, குடும்பத்தோடு விசா கிடைத்ததாக வந்து சேர்ந்து, ஐக்கிய இராச்சியத்தில், அடிப்படை வசதிகளைக் கூட தம் குழந்தைகளுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாமல், ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தரத்திலான வாழ்க்கை கூட இல்லாமல், பாடசாலைக் கல்வியும் தடைப்பட்டு, சொல்லப்பட்ட தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியாமல் பரிதவிக்கும் ஒரு குடும்பத்தைக் காணக் கிடைத்தது.

அதனையடுத்து, இலங்கையில் நல்ல நிலையில் உள்ள ஒரு பெரிய தொழிநுட்ப சேவை நிறுவனத்தின் முக்கிய நிர்வாகியாக இருந்து, நல்ல நிலையில் வாழ்ந்த நபர் ஒருவர், இன்று சட்டத்துக்குப் புறம்பாக, கையில் பணம் கிடைக்கும் தொழிலையெல்லாம் செய்து, ஏதோ ஒரு வகையில் குடும்பத்தைக் காப்பாற்றியாக வேண்டும் என்பதற்காக அழுதழுது அல்லல் படும் நிலையும் காணப்படுகிறது. இவற்றுக் கெல்லாம், எழுத்திலோ - பேச்சிலோ தீர்வு கொடுக்க முடியாது.

ஏனெனில், முதலில், மேலை நாடுகளில் நல்ல வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. ஆனாலும், கள யதார்தம் பொதுவாக அறியப்படுவதில்லை. அதனை, ஏலவே சென்றவர்கள் எடுத்துக் கூறினாலும், ஒரு வேளை நாம் முன்னேறக் கூடாது என்று இவர்கள் எண்ணுகிறார்களோ என்ற சந்தேகமே நிலவும். ஆறு மாதங்களுக்கு முன்பாக, எனது நண்பர் ஒருவரின் உறவினரொருவர் இவ்வாறு தொடர்பு கொண்டிந்தார்.

தனது மனைவி நாட்டில் ஒரு மருத்துவர் எனவும் தெரிவித்த அவர், ஐக்கிய இராச்சியத்துக்குக் குடிபெயர முடிவெடுத்துள்ளதாகவும், தனது மனைவி கல்வியைத் தொடரப் போவதாகவும் சொன்னார். ஐக்கிய இராச்சியத்தில் வாழ்வதில் உள்ள உள்ளும் புறமும் முழுமையாக அறிந்து கொள்ள விரும்புவதாகவும் சொன்ன அவர், அடிப்படைச் செலவுகளை பட்டியலிடச் சொல்லி, அதனை காகிதத்தில் எழுதி கூட்டிக் கழித்து முடிவெடுத்து, ஈற்றில் குடும்பத்துடன் வந்து சேர்ந்தார். இரண்டு மாதங்கள் தொடர்பற்றிருந்த நபர், பின் தொடர்பில் வந்த போது, நீங்கள் முன்னர் சொன்னது போன்று இங்குள்ள வாழ்க்கையைச் சமாளிக்க நான் தனியாளாக வேலை செய்வது கடினம். வேறு தெரிவும் இல்லை, மீண்டும் நாட்டுக்கே போகலாம் என்று யோசிக்கிறேன் என்றார்.

இவை ஒவ்வொன்றும், தனி நபர் அனுபவங்கள். சிலரின் அனுபவங்கள் மாற்றமாக அமையலாம். ஒரு வேளை, அவர்களுக்கு பல்வேறு வழிகளில் எல்லாமே சரியாக அமைந்திருக்கலாம். உதாரணமாக, சொன்னபடி வேலை வாய்ப்பு கிடைத்திருக்கலாம். ஆரம்பத்தில் கை கொடுக்கவும், வாழ இடங்கொடுக்கவும் பல்வேறு வகையில் உதவிகள் இருந்திருக்கலாம். ஆக, இவ்வாறான தீர்க்கமான முடிவுகளை எடுக்க முன்னர், விரிவான தேடல் அவசியம் என்பதே இங்கு சொல்ல விரும்புவது.

வெளி நாடுகளுக்கு இடம்பெயர்வது சில வேளைகளில் காலத்தின் கட்டாயமாகிறது. சில நேரங்களில், கட்டாயத் தேவையாகிறது. ஊதாரணமாக, 90களில் தொழிநுட்பத்துறை நாட்டில் போதிய முன்னேற்றத்தைக் கண்டிராத நிலையில், தொழிற்துறையில் முன்னேற மேலை நாடுகளில் அதனைத் தேட வேண்டிய கட்டாயம் என் போன்றவர்களுக்கிருந்தது. இன்றும், அவ்வாறான கட்டாயம் ஏதோ ஒரு வகையில் யாருக்கோ இருந்து கொண்டுதான் இருக்கும். ஆயினும், எது முக்கியம் என்றால், முடிவுகளுக்கு முன்பதான முறையான தேடலாகும்.

இந்த வாரம், மீண்டும் ஐக்கிய இராச்சிய பொருளாதார வீழ்ச்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வளர்ந்து கொண்டு வருகிறது என்று அரசியல்வாதிகளால் பூதாகரமாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்த பொருளாதாரம், கடந்த வருடமே, உத்தியோகபூர்வ ரீதியாக மந்த நிலையை (recession) அடைந்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், தற்போது, அதன் பரபரப்பு இங்கு விரிந்து கொண்டிருக்கிறது. காற்றாடி போல், அவ்வப் போது இடம்பெறும் கள மாற்றங்களுக்காகவெல்லாம் மன உளைச்சலுக்குள்ளாகும் நபர்கள், இந்த அறிவிப்பு வெளியாகி 24 மணி நேரத்துக்குள்ளேயே, மீண்டும், அநியாயத்துக்கு முடிவெடுத்து வந்து விட்டோம், நாட்டுக்கே திரும்பப் போகிறோம் என பேச ஆரம்பித்துள்ளார்கள.

முதலாளித்துவ பொருளாதாரம் பற்றிய ஆய்வுமில்லை, அலசலுமில்லை, வாழ்க்கை நீரோட்டத்தின் சவால்களை எதிர் கொள்வதற்கான திடமான திட்டமும் இல்லையென்றால், இவ்வாறு, பலமான காற்று வீசும் போதெல்லாம் சரிந்து வீழ்வதொன்றே தெரிவாக இருக்கும். ஆக, 70கள் போன்றன்றி, இன்று உலகம் மிகவும் சுருங்கி பூகோளமே ஒரு கிராமம் போன்றாகியுள்ள நிலையில், தேவைகள் நிமித்தம் எடுக்கும் முக்கியமான முடிவுகள், குறிப்பாக இடப்பெயர்வு சம்பந்தமாக முக்கிய தெளிவுகளைப் பெற்று, அதனடிப்படையில் இயங்குவது நீங்கள் கட்டியெழுப்பும் உங்கள் குடும்ப வாழ்வுக்கும் - குழந்தைகளின் எதிர்காலத்துக்கும் நன்மை பயக்கும்.

ஒற்றையறையில் தலையணையும் - போர்வையும் மாத்திரம் வைத்துக் கொண்டு லண்டனில் வாழ்தல் கௌரவம் தரும் என்று எண்ணுபவர்கள் விதி விலக்கானவர்கள்!

# கல்பிட்டி ஐயூப் இல் கால் கோள் விழா





(அரபாத் பஹுர்தீன்)

கல்பிட்டி ஐயூப் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் 2024ஆம் ஆண்டின் கால் கோள் விழா நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் எஸ். சியாவுல் ஹக் தலைமையில் இடம்பெற்றது.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தலின் படி 2024 ஆம் ஆண்டிற்கு தரம் 1இற்கு மாணவர்களை உள்ளீர்க்கும் நிகழ்வு இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் 22ஆம் திகதி இடம்பெற வேண்டும் என கூறப்பட்டிருந்தது. அதற்கமைய கல்பிட்டி ஐயூப் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் கால் கோள் விழா 22 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆரம்பித்திருந்தது. தரம் 1 இற்கு மொத்தம் 64 மாணவ மாணவியர் தெரிவாகியிருந்தனர். இவர்கள் பாடசாலையின் பிரதான நுழைவாயில் இருந்து பேண்ட் வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டனர். பாதையின் இரு ஓரங்களிலும் தரம் 2 மாணவ மாணவியர் வரிசையாக நின்று மலர் தூவி புதிய மாணவ மாணவியர்களை வரவேற்றனர்.

பின்னர் தேசிய கீதம் மற்றும் பாடசாலைக் கீதம் இயற்றப்பட்டு தேசிய மற்றும் பாடசாலைக் கொடிகளும் ஏற்றப்பட்டன. பின்னர் அனைவரும் இந்நிகழ்விற்கு அழைக்கப்பட்ட சிறப்பு அதீதிகளின் உரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து 64 புதிய மாணவர்கள் இரு வகுப்புகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களின் ஆசனங்களில் அமர்த்தப்பட்டனர்.

இக் கால் கோள் விழாவிற்கு கல்பிட்டி கல்விக் கோட்டத்தின் ஆசிரிய ஆலோசகர் மற்றும் இப் பிரதேச பள்ளி பரிபாலன சபை உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் என பெறும் எண்ணிக்கையிலான வர்கள்பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “ஸிஹாஹ் ஸித்தா” ஹதீஸ் கிரந்தங்களின் மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா

கொழும்பு ஸாஹிரா கல்லூரி தமிழ் பிரிவு மற்றும் ரஹ்மத் பதிப்பகம் இணைந்து நடத்தும் “ஸிஹாஹ் ஸித்த” ஹதீஸ் கிரந்தங்களின் மொழிபெயர்ப்பு தொகுதி அறிமுக நூல் வெளியிடும் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை (01.03.2024) பி.ப 4.00 மணிக்கு அதிபர் டிரிஸ்வி மரிக்கார் தலைமையில் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அப்துல் கபூர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஜாமியா நளீமியா இஸ்லாமிய நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்ஹ் ஏ.சி அகார் முஹம்மத் கலந்து கொள்ள உள்ளத்துடன், சிறப்பு அதிதிகளாக ,சென்னை-மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித் தலைமை இமாம் மௌலானா கே.எம் இல்லியாஸ் ரியாஜி, புதுப்பேட்டை மஸ்ஜிதே மஹ்மூத் தலைமை இமாம் ஹாஃபிழ் ஏ.பீர் முஹம்மது பஹாபி, மனிதநேய ஜனநாயகக் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். தமீமும் அன்சாரி, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொருளாளர் ஏ.ஏ.ஏ.அஸ்வர், ரஹ்மத் பதிப்பகத்தின் தலைவர் எம். எம். முஸ்தபா, ஆளுனர் சபையின் செயலாளர் அலவி முஹ்தார், , ஆளுனர் சபையின் சமய உபகுழு தலைவர் எம்.டி.ஏ.ஆரிப், உப அதிபர் ஏ.எம்.மிஹ்ழார் மற்றும் சர்வதேச புகழ் ஒளிபரப்பாளர் பி. எச் அப்துல் ஹமீத் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.




# கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ரமழான் முன் விற்பனை சந்தை





(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு முஸ்லிம் மகளிர் தேசிய கல்லூரி நேற்று (24) ஆம் திகதி பழைய மாணவிகள் இணைந்து பாடசாலையின் கட்டிட நிதிக்காக ரமழான் முன் விற்பனை சந்தை ஒன்றினை கொழும்பில் உள்ள இலங்கை கண்காட்சி மத்திய நிலையத்தில் நடாத்தினார்கள்..

இந் நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் பாத்திமா நஸ்ரியா முனாஸ் மற்றும் பழைய மாணவிகள் சங்கத்தின் உப தலைவி பெரோஸா முசம்மில் ஆகியோர்கள் தலைமையில் ரமலான் முன் விற்பனை சந்தைகள் பாடசாலை மாணவிகளது உற்பத்திகள் கண்காட்சிகள் விற்பனைச் சந்தைக்கு விடப்பட்டன

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பைசல் செர்மிக் முகாமைத்துவ பணிப்பாளர் பைசால் மற்றும் டைமன்ட் நிறுவனத்தின் விற்பனை முகாமைத்துவ முகாமையாளர் சேர்த்திக்காவும் அதிதிகளாக கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்தனர் அத்துடன் பிரதம அதிதி அவர்கள் இக் கல்லூரியின் புதிதாக நிர்மாணிக்கப்பட உள்ள நிர்மாணத்திற்கு நிதி அன்பளிப்பினை வழங்கி வைத்தார்

அத்துடன் கல்லூரி அதிபர் இங்கு தகவல் தருகையில்,

கொழும்பில் மிகவும் பிரபல்யம் பெற்ற இப் தேசிய பாடசாலையான முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு 3500க்கும் அதிகமான மாணவிகள் கல்வி கற்றுவருகின்றனர். அவர்களை உள்ளடக்குவதற்கு போதிய பௌதீக வளங்கள் போதாமையாக உள்ளது. அதற்காக 1000 மில்லியன் ருபா செலவில் பல தேவைகள் கட்டிடமொன்றை நிர்மாணிபபதற்கு பழைய மாணவிகள் கல்லூரி பீவருத்திச் சங்கங்கள் நலன் விரும்பிகள் திட்டமிட்டு வரைபடங்களை வரைந்து கல்வியமைச்சின் அனுமதியையும் பெற்றுள்ளனர் இதற்காக நிதிகளை தனவந்தர்கள் பழைய மாணவிகள் கட்டிட நிதிக்காக நிதி திரட்டி வருகின்றோம் எனத் தெரிவித்தார் இக் கட்டிடத்திற்காக பழைய மாணவிகள் 10 ஆயிரம் ருபா பெருமதியான டிக்கட்டினைப் பெற்று தமது அன்பளிப்பினை செய்ய முடியும் எனவும் கல்லூரி அதிபர் அங்கு தெரிவித்தார்.



# நானா நீயா அவனா ?



சபீர் மொஹமட்

# ஐயோ பாவம்!!

எமது தெருவில் நான்காவது வீடு சுமையா மாமி. பள்ளியில் இருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும்போது, சுமையா மாமி "ஆ மகன் என்ன கத"

சுமையா மாமிக்கு நன்றாக சிங்களம் தெரியும். அதிகமான நேரம் சிங்கள தொலைக்காட்சி நாடகங்களிலே சுமையா மாமி நேரத்தை கடத்துவது எமது தெரு பூராகவும் அனைவரும் தெரிந்த ஒரு இரகசியம். சுமையா மாமி திடீரென்று பாதையில் சென்று கொண்டிருந்த எனது "சுக துக்கத்தை விசாரிப்பது ஏன்" என்று அவருடன் கதைத்த மறு நிமிடத்திலேயே நான் தெரிந்து கொண்டேன்.

மகன், "பாம்பு" டீவி சனல்ல "கது" எண்ட சிங்கள நாடகத்தில ஒரு சின்ன தேரரா நடிச்ச அந்த 5வயசு புள்ள உண்மையாவே துறவறம் பூண்டதா பேஸ்புக்ல கண்டேன். அது உண்மையா? அத பத்தி ஏதாச்சும் தெரியுமா மகன் ?

ஓ.. மாமி. அந்த கதாபாத்திரத்தில் நடிச்ச அந்த புள்ள உண்மையாவே துறவியா மாறி இருக்காங்க. அதுதான் இப்ப பேஸ்புக்ல ஹொட்டான டொபிக்.

"ஐயோ பாவம் சின்ன புள்ள. அவங்கட அப்பா அம்மாவுக்கு அறிவு இல்லையா. காசுக்கு நடிச்சதும் உண்மையா வாழறதும் சரி கஷ்டம். பாவம் அந்த பிள்ளை. நான் ஆசையா பார்த்த ஒரு நாடகம் அது. இது மாதிரி சின்ன புள்ளகல பன்சலக்கு அனுப்புறதுக்கு என்ன சரி செய்யணும் மகன். அவங்கட விருப்பம் இல்லாமல் தான் இப்படி அனுப்புறாங்க. கட்டாயம் அதுக்கொரு வயசெல்ல இருக்கணும். சரி தம்பி உம்மாவை கேட்டதா சொல்லுங்க.."

நானும் வீட்டை நோக்கி நடந்தேன். அப்போது சுமையா மாமி பற்றி ஒரு சில விடயங்கள் என் மனதில் தோன்றின. சுமைய மாமிக்கு கிட்டதட்ட 45 வயது இருக்கும். அவருடைய கணவர் கூலி தொழில் செய்கின்ற ஒருவர். மொத்தமாக அவர்களுக்கு ஆறு பிள்ளைகள். மூத்த மூன்று பேரும் பெண் பிள்ளைகள் அடுத்த மூன்று பேரும் ஆண் பிள்ளைகள். நான் அறிந்த வகையில் மூன்று பெண் பிள்ளைகளில் இரண்டு பேர் திருமணம் முடித்துள்ளார்கள். மீதி 3 ஆண் பிள்ளைகளில் இரண்டு பேர் மதரஸாவில் ஓதுகின்றார்கள். இளைய மகனை அடுத்த வருடம் மதரஸாவில் சேர்க்க உள்ளார்கள். மூத்த மகள் ஓ லெவல் முடித்த கையோடு திருமணம் முடித்து பின்னர் விவாகரத்து பெற்று தற்போது வீட்டிலே தான் இருக்கின்றார். அவருக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டாவது மகள் க.பொ.த சாதாரண தரம் எழுதி சென்ற மாதம் தான் திருமணம் முடித்தார். இன்னும் பரீட்சை முடிவுகள் கூட வெளிவரவில்லை. அடுத்த மகள் தரம் 9ல படிக்கிர. குடும்ப சுமை காரணமாகவே மூன்று ஆண் பிள்ளைகளையும் சுமையா மாமி மதரசா அனுப்பியுள்ளார்கள். மூத்த மகள் மற்றும் இரண்டாவது மகள் இருவரும் திருமணம் முடித்தது மௌலவிமார்கள் இரண்டு பேரை. மூத்த மகள் நன்றாக படிப்பதாக ஊர் பாடசாலையின் ஆசிரியர்கள் அனைவருக்கும் தெரியும். ஆனாலும் மகளை பலவந்தமாக இவர்கள் காசுக்காக திருமணம் முடித்துக் கொடுத்ததாகவும் அந்த கொஞ்சம் வயசான மௌலவிக்கு ஏற்கனவே திருமணம் ஆன விடயம் பின்னர் தான் இவர்களுக்கு தெரிய வந்ததாகவும் அதனாலதான் விவாகரத்து பெற்றதா, எனது நண்பர்கள் சிலர் ஒருமுறை கதைத்துக் கொண்டதை நான் கேட்டுள்ளேன். இரண்டாவது மகள் முடிச்ச மௌலவிக்கு சரியான தொழில் எதுவும் இன்னமும் இல்லை. இதுதான் சுமையா மாமி குடும்பக்கதை.

ஆனால் சுமையா மாமிக்கோ இருக்கின்ற பிரச்சினை, சிங்கள ஆக்கல் சிறு பிள்ளைகளை துறவிகளாக மாற்றுவது. அதுவும் அவர் ஆசையாக பார்த்த தொலைக்காட்சி நாடகத்தில் நடித்த சிறுவர் உண்மையிலேயே துறவறம் பூண்டு இருப்பது தான் சுமையான மாமிக்கு இப்போது மிகப்பெரிய கவலையாக உள்ளது.

கடந்த வாரம் சமூக வலைத்தளங்களில் அதிகமாக பேசப்பட்ட தலைப்புகளில் பிரதானமான ஒரு தலைப்பு, பிரசித்தி பெற்ற ஒரு தனியார் தொலைக்காட்சி நாடகம் ஒன்றிலே குழந்தை துறவியாக நடித்த ஒரு கதாபாத்திரம் உண்மையாகவே துறவியாக மாறிய சம்பவம் ஆகும். பலரும் இதனை சமூக வலைத்தளங்களில் விமர்சித்து இருந்தார்கள். குறிப்பாக தொலைக்காட்சி நாடகங்களில் குழந்தை கதாபாத்திரமாக நடிக்கும் குழந்தைகள் கொஞ்சம் காலத்தில் அந்த கதாபாத்திரமாகவே நிஜ வாழ்க்கையில் மாறுவதாகவும் அதன் காரணமாக வெளிநாடுகளில் அவ்வாறு குழந்தை கதாபாத்திரங்களில் நடித்த குழந்தைகளை திரும்பவும் சாதாரணமான வாழ்க்கை முறைக்கு மாற்றுவதற்காக உளவியல் ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் பல வழங்கப்படுவதாகவும் கூறி இருந்தனர். எனினும் இந்த குழந்தையின் விடயத்தில் அனைவரும் பொடுபோக்காக இருந்ததாகவும் குறித்த தொலைக்காட்சி நிறுவனம் இந்த குழந்தையை வைத்து இலாபம் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டியிருந்தனர். அதிலே குறிப்பாக குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தின் உயர் அதிகாரிகளின் குழந்தைகளை வீடுகளிலே பத்திரமாக வளர்த்து பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்கு அனுப்பி பின்னர் வெளிநாடுகளுக்கு கல்வி கற்பதற்காக அனுப்புகின்ற அதே நேரம் அவர்களுடைய தொலைக்காட்சி நாடகங்களில் நடிக்கின்ற கஷ்டமான குடும்பங்களை சேர்ந்த குழந்தைகளை இலாபத்துக்காக இது போன்று பயன்படுத்துவதாக தெரிவித்திருந்தனர். மேலும் குறித்த தொலைக்காட்சி அலை வரிசையில் உரிமையாளர் எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ளமை மேலும் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அது மட்டுமல்லாமல் ஒரு சில யூடியூப் சேனல்கள் மற்றும் பத்திரிகைகள் குறித்த குழந்தையை வைத்து ஒரு சில நேர்காணல்களை மேற்கொண்டிருந்தனர். அதிலே அந்த குழந்தை பின்வருமாறு கூறியிருந்தார்.

"எனக்கு பல ஆசைகள் இருக்கின்றது. இலங்கையில் இருக்கின்ற அத்தனை விகாரைகளுக்கும் சென்று நான் போதனை செய்ய வேண்டும். ஒரு மிகப்பெரிய புத்த சிலையை கட்ட வேண்டும். ஒரு மிகப்பெரிய விகாரையை கட்ட வேண்டும்" இந்த நேர்காணலை தொடர்ந்து மேலும் சமூக வலைத்தளங்களில் இது பற்றி மக்கள் பேசத் தொடங்கினார்கள். குறிப்பாக பௌத்த மதம் என்பது சகலதையும் துறப்பதாகும். அது அவ்வாறு இருக்க "ஆசைகள்" என்ற போர்வையில் விகாரைகளை கட்டும் எண்ணத்தில் துறவியாக மாறுவது எப்படி? போன்ற கேள்விகள் அங்கே கேட்கப்பட்டிருந்தன.

சிறுவர்களை விருப்பத்திற்கு மாறாக மதரஸாக்களுக்கு அனுப்புவதும் விகாரர்களுக்கு துறவற வாழ்க்கைக்காக அனுப்புவதும் இரு வேறுபட்ட சமூகப் பிரச்சினை அல்ல. இவை இரண்டுமே பொருளாதார நெருக்கடி மற்றும் சரியான குடும்ப கட்டுப்பாடு இன்மை போன்ற பிரச்சினைகள் காரணமாக இலங்கையில் தற்போது பாரிய அளவில் சிறுவர்கள் முகம் கொடுத்துள்ள ஒரு சமூகப் பிரச்சினை ஆகும். முஸ்லிம்கள் பௌத்த மதத்தை விமர்சிக்கின்ற அதே நேரம் மதரஸாக்களில் நடைபெறுகின்ற கொடுமைகள் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். அண்மையில் கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற ஒரு ஊரில், மதரஸா ஹஸ்ரத் ஒரு சிறுவனை கொலை செய்து தூக்கிலே இட்ட சம்பவத்தை நாம் அனைவரும் அறிவோம். சிறுவயதில் பெற்றோரின் அன்புக்காக ஏங்குகின்ற அதே நேரம் பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த சிறுவர்களை மதரஸாக்களுக்கு அனுப்புகின்ற ஏராளமான பெற்றோர்கள் எமது சமூகத்தில் இன்னும் இருக்கின்றார்கள்.

சுமையா மாமியிடம் என்னால் இவற்றை நேரடியாக கூற முடியாது. ஆனால் இந்த சமூகத்தில் இருக்கின்ற சுமையா மாமிகள் பௌத்த துறவிகளாக சிறு பிள்ளைகளை விகாரர்களுக்கு அனுப்புவதை பார்த்து கவலைப்படுவதற்கு முன்னர் உங்கள் சமூகத்தில் ஊர்களில் குடும்பங்களில் சிறு பிள்ளைகளை கஷ்டம் காரணமாக மதரஸாக்களுக்கு அனுப்புவதையும் கல்வி கற்பதற்கு ஆசை திறமை இருந்தும் பலவந்தமாக சிறு வயதிலேயே திருமணம் முடித்துக் கொடுக்கின்ற பெண் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும் கொஞ்சம் சிந்தியுங்கள் !!







# முஸ்லிம்களது வக்பு செய்யப்பட்ட சொத்துக்களை எவ்வாறு பாதுகாப்பது




(அஷ்ரப் ஏ சமத்)

தெஹிவளையில் கடந்த 21ஆம் திகதி எஸ்.டி.எஸ் ஜயசிங்க மண்டபத்தில் இலங்கையில் உள்ள வக்பு சொத்துக்களை பாதுகாப்பதற்கான சங்கம் ஒன்று விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை நடாத்தியது. அந் நிகழ்வில் முதலில் இரண்டு மௌலவிமார்கள் வக்பு சொத்துக்களை எவ்வாறு பாதுகாப்பது? நபி (ஸல்) அவர்கள் காலத்தில் வக்பு சொத்துக்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டன, அதற்கான விளக்கம், குர்ஆனில் உள்ள வசனங்கள் போன்ற உதாதாணங்களுடன் விளக்க உரையொன்றை நிகழ்த்தினார்கள்.

இலங்கை வாழ் முஸ்லிம்களின் கணிசமான வக்பு சொத்துக்கள் நமது முன்னோர்கள் நன்நோக்கோடு இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகத்திற்காக வக்பு செய்துள்ளவையே.

அதனை சில உறவினர்கள், பரம்பரையினர் அதனை நிர்வகிப்பவர்கள் அச் சொத்துக்களை மீள வேறு விதமாக உரிமையாக்குதல் , கம்பனியாக்குதல், தமது வியாபாரத்திற்காக பாவித்தல் போன்ற பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக முஸ்லிம்களது சொத்துக்களை பாதுகாக்கும் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அவர்கள் இயங்கி வருகின்றனர்.

தெஹிவளை,ராஜகிரிய, மாளிகாவத்தை மையவாடி, மாக்கோல அநாதை இல்லம், மகரகம கபூரியா அரபிக் கல்லாரி, திக்குவல்லை கொடப்பிட்டிய கானி பாலர் பாடசாலை , கல்லேலியா அரபிக் கல்லுாரி, கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் திடீர் நிர்வாகிகள் நியமனம் , போன்ற வக்பு சொத்துக்கள் சம்பந்தமான இவைகளை பாதுகாக்குமுகமாக சில முஸ்லிம் நன்நோக்கு கொண்டவர்கள் தொண்டர் அடிப்படையில் இணைந்துள்ளனர்.

அத்துடன் ஓய்வுபெற்ற பாராளுமன்றத்தின் பிரதான நிர்வாகச் செயலாளர், பிரதம மந்திரி அலுவலகம் ஆகியவற்றில் சேவையாற்றிய லெஸ்லி டி சில்வா பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது சம்பந்தமாகவும் கருத்துக்களை தெரிவித்தார்.

எம்.ஜே.எம். முபாரக் கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலின் முனனாள் பரிபாலன சபை உறுப்பினர் தகவல் தருகையில்,

கடந்த 16 வருடங்களாக கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் பரிபலான சபையின் நாங்கள் நிர்வாகத்தினை திறம்பட நடத்தி வந்தோம். எங்களது சக்திக்கேற்ப கடந்த 16 வருடங்களாக இப்பள்ளிவாசல் எவ்வித பொதுமக்கள் பிரச்சினைகளும் எழவில்லை. கடைசியாக சிலர் இந்த நிர்வாக சபைக்குள்ளே வருவதற்கு முயற்சி எடுத்தார்கள். அதனால் அவர்கள் சில பிரச்சினைகளை ஏற்படுத்தினார்கள். இதனால் வக்பு சபை திடீரென தற்போதுள்ள பரிபாலன சபையை எவ்வித முறைப்பாடுகளோ கேள்விகளோ இன்றி எங்கள் சபையை நீக்கி விட்டு 9 பேர் கொண்ட புதிய சபைக்கு பெயர்களை அறிவித்து நியமித்து இருக்கிறார்கள்.

இதனை இப்பிரதேச மஹல்லா வாசிகள் ஏற்றுக் கொள்ளவில்லை .கடந்த பரிபலான சபை நியமிக்கப்பட்டு 3 வருடத்தின் இறுதி நாளாக கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இருந்தது. கடந்த ஆகஸ்ட் 13 ஆம் திகதி பொதுக் கூட்டத்தில் பரிபாலன சபையாக புதிய சபை ஒன்றை மஹல்லா வாசிகளின் விருப்பத்திற்கேற்ப நியமிகத்துக்கொள்ளுமாறு அறிவித்திருந்தோம். அதற்காக இவ் வருடம் ஜனவரி 14 ம் திகதி தேர்தல் நடத்துமாறும் அறிவிருத்திருந்தும், வக்பு சபை அதனைச் செயற்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் புதிய 9 பேரை நியமித்துள்ளார்கள். இதனால் மஹல்லா வாசிகள் குழப்பமடைந்த நிலையில் அங்கு பிரச்சினைகள் உருவானது. ஆகவே தான் வக்பு மேலும் ஒரு திகதியை அறிவித்து ஒரு புதிய நிர்வாக சபை மக்கள் வாயிலாக தெரிவு செய்யுமாறு நான் வேண்டிக்கொள்கிறேன், எனத் தெரிவித்தார்

ஹுசைன் ஜலீல் தெஹிவளை கருத்து தெரிவித்தபோது....

தெஹிவளையில் உள்ள ஓர் பள்ளிவாசலுக்குரிய ஒரு சொத்தினை சிலர் வர்த்தகப் பொருளாக அதனை விற்று தொடர் மாடி வீட்டுத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு எத்தனிக்கிறார்கள். ஆனால் பள்ளிக்குரிய ஒரு வக்பு சொத்தினை ஓர் மத்ராசாவோ அல்லது முஸ்லிம் மாணவர்களின் கல்வி நடவடிக்கை, நூலகம் போன்றவற்றுக்கு பயன்படுத்தலாம். ஒரு தஃவா விடயத்திற்கு பயன்படுத்தலாம். இவ்வாறாகத்தான் வக்பு சொந்த விஷ யங்கள் எவ்வாறு கையாளவேண்டும் என எமக்கு ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் நடைமுறையைக் காட்டித் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நமக்கு முன்னுள்ள மூதாதையர்களும் இதனை நடைமுறைப்படுத்தியும் இருக்கிறார்கள்.

உதாரணமாக தெஹிவளை களுபோவில பெரிய பள்ளியை எடுத்துக் கொண்டால் அங்கு 4 ஏக்கர் காணி உள்ளது. இதில் அங்கு விடுதிகள் நிர்மாணித்து வெளிமாவட்டங்களில் இருந்து கொழும்பில் கல்வி கற்பதற்காக வரும் முஸ்லிம் மாணவர்களுக்கு விடுதிகள் வழங்கியுள்ளார்கள். அது ஒரு சமூகத்திற்கு உதவுவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் அவர்கள் அந்தச் சொத்தினை அபிவிருத்திக்காக ஒருபோதும் விற்கவில்லை..

உதாரணமாக தொடா□மாடி வீடுகள் நிர்மாணிக்க வேண்டும் என்று இந்தக் காணியில் ஒரு துண்டை அவர்கள் ஒருபோதும் விற்கவில்லை. தொடர்மாடி சமூகத்திற்கு எவ்வித பிரயோசனமும் இல்லை.. அது மஹல்லா வாசிகள் வாழும் மற்றும் பள்ளிவாசல் சூழ்நிலையில் பிரச்சனைகளை ஏற்படுத்தும். தொடர் மாடி வீடுகளை முதலிடுபவர்கள் அதனை வாங்கி வாடகைக்கு விடுவார்கள். அதனை யாருக்கும் அவர்கள் வாடகைக்கு விடலாம். வக்பு சொத்தை வாடகைக்கு விடுவதால் பிரச்சினைகள் ஏற்படும். அதுவும் பள்ளிவாசலுக்கு மேல் இந்த அப்பார்ட்மென்ட் இருந்தால் அது எமது மத இஸ்லாமிய கலாச்சாரத்திற்கு ஏற்றதாக அமைய முடியாது.

இதனால் பல பிரச்சினைகள் அங்கு ஏற்படும். ஆகவே . வக்பு சொத்துக்களை நமது சமூகத்தின் கல்வி கற்கின்ற மாணவர்களுக்காக விடுதி நிர்மாணிக்க முடியும். அல்லது அபிவிருத்திற்காக நமது சமூகத்தில் தனவந்தர்கள் உள்ளார்கள். அவர்கள் நிறைய பாடசாலைகளுக்கு கட்டிடங்களை நிர்மாணித்துக் கொடுத்துள்ளார்கள். ஆகவே அவ்வாறான தனவந்தர்களை நாம் நாடி சில அபிவிருத்திகளை செய்ய முடியும். ஆனால் வக்பு சொத்துக்களை விற்பதற்கு நாம் அனுமதிக்க முடியாது. என ஹுசைன் ஜலீல் தெரிவித்தரார்.

மஹரகம கபூரியா பழைய மாணவர் அஹ்னான் மௌலவி கருத்து தெரிவிக்கையில் -

இலங்கையில் உள்ள வக்பு சொத்துக்களை பாட்டனார் காலத்தில் வக்பு செய்த பிறகு தற்போது கடந்த இரண்டு ,மூன்று வருடத்திற்குள் நாட்டில் பொதுச் சொத்துக்களை தற்பொழுது வக்பு செய்தவர்களின் மரணத்திற்குப் பிறகு அவரது மகன்மார்கள் அல்லது பூட்டன் 4வது தலைமுறையில் ஒருவர் வந்து தனது வாப்பா பூட்டன் சொத்து அல்லது தந்தையின் சொத்து அதனால் நாங்களே முகாமைத்துவ சபைத் தலைவர் எனக் கூறி 5, 6 தசாப்தங்களுக்கு பிறகு சொந்தம் கொண்டாடுகின்றனர். அச் சொத்துக்களை விற்பனை செய்கின்றனர்.

அதில் உள்ள பள்ளிவாசல்கள், மத்ரசாக்களை மூடி அதில் ஹோட்டல்கள் மற்றும் வேறு வியாபார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்றனர். இதனை நமது முஸ்லிம் சமூகம் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும். எமக்கு இல்லாவிட்டால் நமது எதிர்கால சமூகம் இதனை ஆண்டு ஆண்டாக பயன்படுத்தப்பட்டு ஆன்மிகத் துறையில் பலர் கற்று வெளியேறி நாடளாவிய ரீதியில் தௌபா பணியாற்றி வருகிறார்கள். ஆகவே தான் இதனை இந்த நாட்டில் உள்ள ஜம்மியத்துல் உலமா சபையினர் வெறும் பிறை பார்ப்பது, ஜ/ம்மாவை சுருக்கி ஓதுதல் போன்ற விடயங்களை மாத்திரம் பணி என்று இருந்துவிடாமல் இவ்வாறான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை தமது கவனத்திற்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் உள்ள நமது முன்னோர்கள் முஸ்லிம் கொடையாளிகள் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகத்திற்காகவும் எதிர்கால சமூகத்திற்கு நல்ல நோக்கத்தோடு வக்பு செய்யப்பட்ட சொத்துக்களை பாதுகாப்பதற்கு எம் மத்தியில் இருக்கின்ற படித்தவர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் பாதுகாப்பதற்கு முன்வருதல் வேண்டும். காலம் சென்ற நளீம் ஹாஜியார் வக்பு செய்த சொத்துக்களை அவரது புதல்வர்கள் ஒருபோதும் சொந்தம் கொண்டாட வரவில்லை. இது போன்று ஏனையோர்களும் முன்னுதாரணமாகக் கொள்ளுதல் வேண்டும்.

வக்பு சொத்துக்கள் பற்றிய சிறந்த விளக்கங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும். சமூகத்தில் குறிப்பிட்ட ஓர் சாரர் ஒவ்வொரு ஊரிலும் வக்பு சொத்துக்களை சூறையாடுவதையிட்டு நாங்கள் கவலை அடைகிறோம். ஆகவேதான் ஒவ்வொரு ஊரிலும் உள்ள முஸ்லிம் நலன்விரும்பிகள், வர்த்தகர்கள், சட்டத்தரணிகள், படித்தவர்கள் இதனைப் பாதுகாப்பதற்காக முன்வருதல் வேண்டும். வக்பு சொத்து என்கிற போது குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மாத்திரம் பொறுப்பு கிடையாது. ஒட்டு மொத்த முஸ்லிம் சமுகத்திற்கும் உரிய பொறுப்பாகும். அவர்களும் எங்களுடன் இணைந்து போராட வேண்டும்..

முஸ்லிம் சமூகத்தில் நல்ல நோக்கத்திற்காக வக்பு செய்தார்களோ அவர்களது நோக்கம் நிறைவேற வேண்டும். இந்தப் போராட்டம் நாங்கள் வெற்றி தோல்வி கண்டாலும் சூரா பகரா வில் குறிப்பிட்டுள்ளதாவது வக்பு சொத்துக்களை நீங்கள் உண்ணக் கூடாது. அது அல்லாஹ்வின் கடுமையான ஓர் எச்சரிக்கை பொதுச் சொத்துக்களில் ஆசை வைத்திருப்பவர்கள் இந்த ஆயத்தை கவனத்திற் கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் ஓர் சொத்தினை முஸ்லிம் சமூகத்திற்காக வக்பு செய்த பிறகு அதனை திருப்பி எடுப்பதற்கு முயற்சி எடுக்கிறார்கள். அதற்கான ஹதீஸ் தான் எடுத்த வாந்தியை மீள உண்ணுதல் போன்றதற்கு சமனாகும்.என்று கடுமையாக சாடியுள்ளார்கள்.

லெஸ்லி டி. சில்வா (ஓய்வுபெற்ற பிரதான நிர்வாக அதிகாரி பாராளுமன்றம் மற்றும் பிரதம மந்திரி அலுவலகம்) கருத்துத் தெரிவிக்கையில் -

எனது பொஸ், என்னை வழிப்படுத்தியவர்கள் எங்களது காலத்தில் 70 ஆண்டுகளில் இந்த நாட்டில் சீரான சட்டம், தீர்வு,பயம் மனிதாபிமான பொதுச் சொத்தில் பக்தி, இருந்தது. அரசியலமைப்பில் 12வது சரத்தில் சொல்லப்பட்ட சட்டம் மற்றும் தீர்வு தற்பொழுது இல்லை.. இந்த நாட்டில் நாம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்பும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் சொத்துக்களை பாதுகாப்பது பற்றி உரிய அமைச்சு அதிகாரிகள் பாராளுமன்றத்தில் பேசி அதனை தீர்த்து வைப்பதற்கு அதிகாரம் உள்ளது. அவர்கள் அவ்வாறான சொத்துக்களை பாராளுமன்ற சட்டதின் கீழ் கொண்டு வந்து அதனை சட்டமாக்கி அதனைப் பெற்றுக் கொடுக்கும் உரிமை உள்ளது. ஆனால் தற்பொழுது நாம் அனுப்பும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் பிரச்சினைகள் பற்றி கரிசனை காட்டவில்லை .எவ்வாறாயினும் நாம் மக்களது சொத்துக்களை சுவீகரித்தல் தொடர்பில் உடன் நீதிமன்றம் சென்று நீதிமன்றில் நியாயம் கேட்க வேண்டும். அதற்காக இவ்வாறு ஊடகமாநாட்டினை ஏற்படுத்துதல் சங்கம் அமைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் , அதற்கு எதிராக நின்று போராடுதல் போன்ற விடயங்களில் நாம் இறங்க வேண்டும். எனவும் சிரேஸ்ட நிர்வாக உத்தியோகத்தர் லெஸ்லி சில்வா அங்கு உரையாற்றினார்.

## சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்தில் வீடு தீப்பற்றி எரிந்து முற்றாக நாசம்

(எம்.எம்.ஜெஸ்மின், எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்திலுள்ள வீரோன்றில் சனிக்கிழமை (24) ஏற்பட்ட தீயினால் வீரோன்று முற்றாக எரிந்துள்ளதுடன் வீட்டிலிருந்த பொருட்களும் தீக்கிரையாகியுள்ளன.

வீடு தீப்பற்றிய நேரத்தில் வீட்டில் எவரும் இருக்கவில்லை என்றும் தீயை அணைக்க அயலவர்கள் மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை



என்றும் தெரிவிக்கப்படுவதுடன், கல்முனை மாநகரசபை தீயணைக்கும் படையினர் வரவழைக்கப்பட்டு தீயை அணைத்தும் வீடு தீக்கிரையாகிவிட்டது .

அண்மையில் இக் கிராமம் வெள்ள அனர்த்தத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது.

இச் சம்பவம் தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




நிந்தவூர்,சம்மாந்துறை மற்றும் கல்முனை நகர் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்திருந்த கடற்கரையோர சிரமதான நிகழ்வு நிந்தவூர் கடற்கரை பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விளையாட்டுக் கழகங்கள், பொது நலன்புரி அமைப்புகள், தன்னார்வு தொண்டர்கள் ,பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(எம்.எம்.ஜெஸ்மின்)

# உலகின் 37ஆவது உறுதியான இஸ்லாமிய வங்கியாக அமானா வங்கி தரமுயர்வு



2023 ஆம் ஆண்டில் உலகின் உறுதியான இஸ்லாமிய வங்கிகளில் அமானா வங்கி 37 ஆம் இடத்துக்கு உயர்வடைந்துள்ளதாக அறிவித்துள்ளது. ஏசியன் பாங்கர் தரப்படுத்தலில் இந்த உயர்வு பதிவாகியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் 82 ஆம் இடத்தில் காணப்பட்ட நிலையில், இந்த உயர்வை எய்தியுள்ளது. மத்திய கிழக்கு மற்றும் தென் கிழக்காசிய பிராந்தியங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற பல இஸ்லாமிய வங்கிகளை பின்தள்ளி, அமானா வங்கி முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியில் காணப்படும் வட்டியின் அடிப்படையில் இயங்காத நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் நிதிப் பெறுபேறுகள் மற்றும் ஐந்தொகைகளை மதிப்பீடு செய்து, ஏசியன் பாங்கரினால் வழங்கப்பட்ட விவரமான புள்ளியிடலில் அமானா வங்கியின் உறுதியான நிதிச் செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பரிபூரணமான மற்றும் வெளிப்படையான புள்ளி விவர அட்டையினால் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஐந்தொகை நிதிச் செயற்பாடுகளின் ஆறு பிரிவுகளை மதிப்பீடு செய்திருந்தது. அதில் அளவிடும் ஆற்றல், ஐந்தொகை வளர்ச்சி, இடர் கோவை, இலாபகரத்தன்மை, சொத்தின் தரம் மற்றும் திரள்வுத் தன்மை போன்றன அடங்கியிருந்தன.

2023 மூன்றாம் காலாண்டு நிதிப் பெறுபேறுகளின் அடிப்படையில், அமானா வங்கி நிறைவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் வரிக்கு முந்திய இலாபம் மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் ஆகியவற்றில் முறையே 78மூ மற்றும் 98மூ வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தன. மக்களுக்கு நட்பான வங்கி மாதிரியில் அதிகரித்துச் செல்லும் கேள்வியை உறுதி செய்து, வங்கியின் மொத்த வைப்புகள் 14மூ இனால் வளர்ச்சியடைந்து ரூ. 128 பில்லியனாக உயர்வடைந்திருந்ததுடன், முற்பணங்கள் 5மூ இனால் உயர்ந்திருந்தது. தொழிற்துறையில் நிலவிய நிலை 3 மதிப்பிறக்க நிதியளிப்பு விகிதமான 1.6மூ ஐ வங்கி தொடர்ந்தும் கொண்டிருந்தது. அண்மையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட உரிமைப் பங்கு வழங்கலினூடாக அமானா வங்கியின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ. 150 பில்லியன் மைல்கல்லை கடந்திருந்தது.

அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், “ஏசியன் பாங்கர் தரப்படுத்தல்களில் அமானா வங்கியின் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் காண்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். நிதி வலிமை, மீட்சி மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய பெறுமதிகள் போன்றவற்றில் எமது அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சர்வதேச மட்டத்தில் காணப்படும் இஸ்லாமிய வங்கிகள் வரிசையில் அமானா வங்கி தரப்படுத்தப்பட்டுள்ளமை உண்மையில் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளதுடன், எமது சாதனைகள் தொடர்பில் திருப்தி கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. எமது அணியினரின் அர்ப்பணிப்பு மற்றும் மூலோபாய ரீதியில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளினூடாக எம்மால் முன்நோக்கி செல்ல முடிந்துள்ளதுடன், சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலிலும் சிறப்பாக இயங்க முடிந்திருந்தது. சிறப்பை நோக்கிய பயணத்தில் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இயங்க எதிர்பார்ப்பதுடன், எதிர்காலத்திலும் எமது முன்னேற்றகரமான பயணத்தை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.” என்றார்.

அமானா வங்கி பற்றி

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளுனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. ஐளுனுடீ குரூப் ‘யுயுயு’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 100 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக த ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான ழுசிாயுெயசந நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.




# பழைய மாணவியர் சங்கத்தினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பத்ரியாவின் விஞ்ஞான ஆய்வு கூடம்







கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியர் சங்கத்தினால் முழுமையாகப் புனர்நிருமாணம் செய்யப்பட்ட விஞ்ஞான கூடம் கடந்த 21ஆம் திகதி புதன் கிழமை விமர்சையாகத் திறந்துவைக்கப்பட்டது.

பாடசாலை அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக கம்பஹா வலய விஞ்ஞானப் பாடப் பிரதிக் கல்விப்பணிப்பாளர், கம்பஹா வலய தமிழ் மொழிமூலப் பாடாசலைகளுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர், அத்தனகல்ல கோட்டக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், அயல் பாடாசாலை அதிபர்கள், அல் பத்ரியாவின் முன்னாள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை நிருவாகத்தினர், ஆசிரியர்கள், பழைய மாணவியர் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பத்ரியா நலன்புரி சங்கப் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இவ் விஞ்ஞான ஆய்வுகூடத்துக்காக உடல் உழைப்புக்கு மேலதிகமாக சுமார் 22 இலட்சத்துக்கும் அதிகமான செலவினை தம் அங்கத்தவர்கள் மூலம் நன்கொடையாகப் பெற்று பழைய மாணவியர்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








வவுனியா, சாளம்பைக்குளம் அல் – அக்ஸா பாலர் பாடசாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார்.

# மாலைத்தீவு விவகாரத்தில் இந்தியா, சீனா இடையிலான சர்வதேச அரசியல்...!!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இந்தியாவின் தென்மேற்கில் அமைந்துள்ளது, மாலத்தீவு அழகிய நாடு.

ஒரு காலத்தில் மாலத்தீவுகள் தமிழ்நாட்டின் சோழ மன்னர்கள் ஆட்சியின் கீழ் இருந்தது. இந்த தீவுகள் பின்னர் சிங்களவர்களின் ஆட்சிக்கு மாறியது. கடந்த 1153-ல் மாலத்தீவில் முஸ்லிம் மதம் பரவியது. கடந்த 1558-ல் போர்ச்சுகல், 1654-ல் நெதர்லாந்தின் காலனி நாடாக இருந்த மாலத் தீவு கடந்த 1887-ல் பிரிட்டனின் காலனி நாடாக மாறியது.

இந்திய நகரமான கொச்சியில் இருந்து மாலத்தீவு, சுமார் ஆயிரம் கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இது 1,200 தீவுகளைக் கொண்டது. பெரும்பாலான தீவுகள் மக்கள் வசிக்காதவை. மாலத்தீவின் பரப்பளவு 300 சதுர கிலோமீட்டர். அதாவது, டெல்லியைவிட இது 5 மடங்கு சிறியது. மாலத்தீவின் மக்கள்தொகை சுமார் 4 லட்சம். மாலத்தீவு, 1965இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம்பெற்று, நவம்பர் 1968இல் குடியரசாக மாறியது. மாலத்தீவின் பொருளாதாரம் பெரும்பாலும் சுற்றுலாத் துறையை நம்பியே உள்ளது. மாலத்தீவுக்கு அதிகம் சுற்றுலா செல்பவர்களில் இந்தியர்களே முதல் இடத்தில் உள்ளனர். 2021இல் மூன்று லட்சம் பேரும், 2022இல் இரண்டரை லட்சம் பேரும், 2 லட்சம் பேரும் சென்றுள்ளனர்.

குறிப்பிட்ட ஆய்வின்படி, 5 ஆண்டுகளில் மாலத்தீவில் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இருமடங்காக உயர்ந்துள்ளது. அதாவது கிட்டதிட்ட 11மூ ஆக உயர்ந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் தீவு நாட்டிற்கு வந்த மொத்த சுற்றுலாப் பயணிகள் 11.2 சதவிகிதம் - 18.42 லட்சம் - 11.2 சதவிகிதம் இந்தியர்களாக உள்ளார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

சமீபத்திய நாட்களில் மாலத்தீவில் இருந்து இந்தியாவிற்கு அரசியல் ரீதியான எதிர் குரல்கள் எழுந்து வருவதாக இந்திய ஊடகங்களில் தொடர்ந்து செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் சமூக ஊடகங்கள் சுற்றுலாவைச் சார்ந்துள்ள தீவு தேசத்தை விடுமுறை இடமாகப் புறக்கணிக்க அழைப்புகளால் நிரம்பியுள்ளன. ”அடுத்த சர்ச்சைக்கு” விரைவாக நகரும் சமூக ஊடகங்களின் வேகமான செய்தி சுழற்சியைக் கருத்தில் கொண்டு, உண்மையான பயணத்தில் புறக்கணிப்பு அழைப்புகளின் உண்மையான தாக்கம் கோபத்தின் வெளிப்பாடாக இருக்கலாம். காலப் போக்கில் இது மாறலாம் என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

இரு நாடுகளுக்கும் இடையில் முருகல் இருந்து வருவதை இது போன்ற செய்திகள் ஊடாக தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இந்திய பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணத்தையும், இந்தியர்களையும் குறிப்பிட்டு மாலத்தீவு அமைச்சர்களான மரியம் ஷியுனா, மல்ஷா ஷரீப், மஜ்ஜூம் மஜித் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்திருந்தனர். அதேபோன்று ஆளும் டீ டீ ஆ கட்சியின் கவுன்சில் உறுப்பினர் ஜாஹித் ரமீஸ் தெரிவித்திருந்த கருத்துக்கு கடும் கண்டனங்கள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்த 3 அமைச்சர்களையும் மாலத்தீவு அரசு சஸ்பெண்ட் செய்தது. அத்துடன், இது அவர்களின் தனிப்பட்ட கருத்து எனவும், இதில் மாலத்தீவு அரசுக்கும் சம்பந்தமில்லை எனவும் விளக்கம் அளித்தது. எனினும், பிரதமர் மோடி தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்துக்களை மாலத்தீவு அமைச்சர்கள் தெரிவித்திருந்த நிலையில், அந்நாட்டு தூதர் இப்ராகிம் ஷாகீப்புக்கு இந்தியாவின் மத்திய வெளியுறவு அமைச்சகம் சம்மன் அனுப்பி இருந்தது.

இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகிய இருநாடுகளுக்கிடையே இவ்விவகாரம் தற்போது பூதாகரமாகி உள்ள நிலையில், மாலத்தீவின் புதிய அதிபர் முகம்மது முயிஸ்சு அரசுமுறை பயணமாக சீன நாட்டிற்குச் சென்றிருந்த நிலையில் கடந்த மாதம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய அதிபர் முய்சுவுக்கு முன், மாலத்தீவு அதிபர் யாராக இருந்தாலும் பதவியேற்றதும் முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு வருகை தருவதே வாடிக்கையாக இருந்தது. ஆனால், இந்த விஷயத்தில் தற்போதைய அதிபர் முயிஸ்சு முரண்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதற்குக் காரணம், முகமது முயிஸ்சுவின் மாலத்தீவு முற்போக்கு கட்சியில் சீனாவுக்கு அதிக செல்வாக்கு இருப்பதாகக் கருதப்படுகிறது. அவர் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது சீன தேசத்திற்கு ஆதரவாக பேசுவது போன்ற செய்திகள் வெளியாகிய நிலையில் அவர் அதிபராக பதவியேற்ற நிலையில் அவரது பயணம் மூலம் அந்த செய்தி உறுதியானது .

சீனாவின் உறவை விட மாலத்தீவு மற்றும் இந்தியாவின் உறவு சற்று காலம் முன்னரே தொடர்வதாக அறிந்து கொள்ள முடிகிறது. அதாவது சீனாவிற்கும் மாலத்தீவுக்கும் இடையிலான ராஜதந்திர உறவு 1972ஆம் ஆண்டு தொடங்கியது என்றாலும், இந்தியாவுக்கும் மாலத்தீவுக்குமான உறவு 1965லேயே தொடங்கியது. அந்த வகையில் பார்க்கப்போனால், மாலத்தீவுடன் அதிகாரப்பூர்வ உறவை மேற்கொண்ட முதல் நாடு இந்தியாதான். எனினும், அதற்குப் பிந்தைய ஆண்டுகளில் மாலத்தீவு ஆட்சியாளர்கள் கால ஓட்டம் சர்வதேச நடவடிக்கைகள் காரணமாக தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார்கள். அதாவது இரு நாடுகளின் பக்கமும் சாய்ந்தபடி வந்துள்ளனர்.

1988ஆம் ஆண்டு, மௌமூத் அப்துல் கையூமின் அரசைக் காப்பாற்றுவதற்காக, மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி ராணுவத்தை அனுப்பி, அந்நாட்டுக்கு பாதுகாப்பு அளித்தார்.

பொருளாதார நெருக்கடியில சிக்கித் தவித்த மாலத்தீவை மீட்பதற்காக பலமுறை இந்திய அரசு கடன் கொடுத்து காப்பாற்றியுள்ளது. ஆனால் தற்போது நிலை மாறி உள்ளதை நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.மேலும் கடந்த காலங்களில் விமானம் மற்றும் ஹெலிகாப்டர்கள், ராணுவத் தளவாடங்களையும் இந்தியா மாலத்தீவுக்கு வழங்கியுள்ளது. இதுபோக, மாலத்தீவு கடற்படைக்கு கப்பல் கட்டும் தளம் அமைக்கவும் இந்தியா உதவி வருகிறது.மாலத்தீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களுக்குப் பதிலாக திறமையான தொழில்நுட்ப பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால், ”மாலத்தீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களுக்குப் பதிலாக திறமையான தொழில்நுட்ப பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்தியா - மாலத்தீவு இடையே கடந்த 2ம் தேதி நடைபெற்ற இரண்டாவது உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்துக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் இந்த மாதத்துக்குப் பிறகு நடைபெறும். மாலத்தீவில் மூன்று விமானப்படைத் தளங்களில் இந்திய ராணுவம் உள்ளது. அவர்கள், மாலத்தீவு மக்களுக்கான மனிதாபிமான உதவிகளையும் மருத்துவ உதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.

வரும் மார்ச் 10ம் தேதிக்குள் ஒரு விமானப்படைத் தளத்தில் இருக்கும் ராணுவ வீரர்களுக்குப் பதிலாக தொழில்நுட்ப பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று இந்தியா சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் வரும் மே 10ம் தேதிக்குள் மற்ற இரண்டு விமானப்படைத் தளங்களில் உள்ள ராணுவ வீரர்களும் திரும்பப் பெறப்பட்டு, அவர்களுக்கு மாற்றாக திறமையான தொழில்நுட்ப பணியாளர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இதனை இரு தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளது.

மாலத்தீவில் உள்ள இந்திய விமானப் படைத் தளங்களை தொடர்ந்து பயன்படுத்துவதற்கான சாத்தியமுள்ள தீர்வுகளை உருவாக்க இந்தியாவும் மாலத்தீவும் ஒப்புக்கொண்டுள்ளன. தற்போது மாலத்தீவில் இந்திய ராணுவ வீரர்கள் 70 பேர் உள்ளனர். கடலோர ரோந்துப் பணிகளை மேற்கொள்ள டோர்னியர் 228 ஹெலிகாப்டர் ஒன்றும், ஹெச்ஏஎல் துருவ் ஹெலிகாப்டர் இரண்டும் மாலத்தீவில் உள்ளன.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2024-25-க்கான மத்திய இடைக்கால பட்ஜெட்டில் மாலத்தீவுக்கு ரூ. 779 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 600 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில், இம்முறை கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாலத்தீவின் வளர்ச்சிக்கான பங்குதாரராக இருப்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. வரும் காலங்களில் மாலத்தீவு

மூலம் கிடைக்கும் தெளிவை தொடர்ந்து இந்த நிதி ஒதுக்கீடு மாற்றப்படலாம்” என இந்தியா தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இந்தியா - மாலத்தீவு உறவுகள் 60 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்துவரும் நிலையில், தற்போது விரிசல் ஏற்பட்டிருப்பதற்கு சீனாதான் காரணம் என்கிறார்கள், ஆய்வாளர்கள். இது முற்றிலும் சர்வதேச அளவிலான அரசியல் பின்புலத்தை கொண்டது என்பதை உண்மையாகும்.

மாலத்தீவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டவே சீனா இத்தகைய அரசியல் நகர்வை ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தியாவைப்போன்று சீனாவும் மாலத்தீவின் வளர்ச்சியில் பலமுறை பங்கெடுத்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டில், மாலத்தீவுக்கு சீனா 16 மில்லியன் டாலர் நிதி உதவி வழங்கியது. 2017இல், மாலத்தீவு சீனாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. மேலும் மாலத்தீவு சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு' (டீநடவ யனெ சுழயன) திட்டத்தில் இணைந்தது. இதன் காரணமாகவே இந்தியா - மாலத்தீவு உறவில் விரிசல் விழுந்திருப்பதாகவும், சமீபத்திய நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற முய்சு முழுமையாக சீனாவின் பக்கம் சாய்ந்துள்ளதாகவும் நம்பப்படுகிறது.

இதற்கு உதாரணமாக முன்னதாக அதிபர் தேர்தல் பிரசாரத்தின்போது, அவரது கட்சி “இந்தியாவை வெளியேற்றுவோம்“ என்ற முழக்கத்தை முன்வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மாலத்தீவில் முகாமிட்டுள்ள இந்திய ராணுவம் வெளியேற வேண்டும். இந்தியாவுடன் ஏற்கெனவே செய்த 100 ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று புதிய அதிபர் முகமது முய்சு வலியுறுத்தி வருகிறார். பின்னர் அவர் வெற்றிபெற்றவுடன், துபாயில் இந்திய பிரதமர் மோடியைச் சந்தித்தபின் பேசிய முய்சு, மாலத்தீவு மக்களின் விருப்பத்தை வரவேற்பதாகவும், தங்கள் வீரர்களை இந்தியாவுக்கு திரும்ப அழைப்பதாக இந்திய அரசு உறுதியளித்துள்ளதாகவும் கூறினார். முன்னதாக, 2023, நவம்பர் 17ஆம் தேதி, மாலத்தீவில் இருந்து இந்தியப் படைகளை அகற்றுவது தொடர்பாக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு'விடம் முய்சு பேசியிருந்தார்.

அதே போல் மாலத்தீவு அதிபர் முய்சு மற்றும் அவரது தலைமையிலான கூட்டணி மாலத்தீவில் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு கடன்கள் மற்றும் மானியங்கள் வடிவில் நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர்களை முதலீடு செய்திருக்கும் சீனாவுடன் நெருக்கம் காட்டி வருகிறது. அதிபர் முய்சுவே, மாலத்தீவில் சீன உள்கட்டமைப்புத் திட்டங்களை பற்றி வெளிப்படையாகப் பாராட்டிப் பேசியிருந்தார். தவிர, இந்திய ராணுவ வீரர்கள் அனைவரும் மாலத்தீவை விட்டுவெளியேற வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறார். அத்துடன், இந்தியாவுக்கு எதிராக சீனாவின் பட்டுப்பாதை (ளடைம சுழயன ஐவெையவைஎந) திட்டத்தையும் ஆதரித்து வருகிறார். மேலும் சமீப ஆண்டுகளில் மாலத்தீவு இந்தியாவுடன் கையெழுத்திட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் மறுபரிசீலனை செய்ய விரும்புவதாகவும் முயிஸ்சு கூறி வருகிறார். இது எல்லாமே சீனாவின் நடவடிக்கைகள்தான் என்று சொல்லப்படுகிறது. பொதுவாக இந்த பிராந்தியத்தில் முழுமையாக சீன தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிகள் நடக்கலாம் என்பதை தான் மாலத்தீவு மற்றும் இந்தியாவின் உறவில் ஏற்பட்டுள்ள உரசல்கள் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளும் பில்லியன்கணக்கான டாலர்களை உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் இதர வளர்ச்சி சார்நத பணிகளுக்காக கடனாக வழங்கியுள்ளது. மாலத்தீவு அமைந்துள்ள இந்திய பெருங்கடல் பகுதி முக்கியமான மூலோபாய பகுதியாகக் கருதப்படுகிறது. வளைகுடா நாடுகளில் இருந்து எண்ணெய் கொண்டு வரும் கப்பல்கள் இந்த வழியைத்தான் பயன்படுத்துகின்றன. நீண்டகாலமாகவே மாலத்தீவில் இந்தியாவின் செல்வாக்கு உள்ளது. மாலத்தீவில் இருப்பதன் மூலம் இந்தியப் பெருங்கடலின் பெரும் பகுதியைக் கண்காணிக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளது.கடந்த 2016ஆம் ஆண்டு, தனது தீவுகளில் ஒன்றை சீனாவுக்கு 40 ஆண்டுகளுக்கு வெறும் 50 மில்லியன் டாலருக்கு குத்தகைக்குக் கொடுத்தது மாலத்தீவு. மாலத்தீவும் சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டத்திற்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துள்ளது.சீனாவிடம் இருந்து மாலத்தீவு ஒரு பில்லியன் டாலர் வரை கடன் பெற்றுள்ளதாக நம்பப்படுகிறது. இந்தப் பணம் மாலத்தீவில் உள்கட்டமைப்பு திட்டங்களில் முதலீடு செய்யப்படுகிறது. சீன கடற்படை மாலத்தீவில் தனது எல்லையை அதிகரிக்க முயன்று வரும் அதே வேளையில் சீனாவின் செல்வாக்கைத் தடுக்க இந்தியா முயன்று வருகிறது. இந்த நிலையில்

இந்தியாவைப் புறக்கணிக்குமாறு மாலத்தீவிடம் சீனா கூறவில்லை' என்று அந்நாட்டு அரசு பத்திரிகையான 'குளோபல் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. இதுகுறித்த அந்தச் செய்தியில், 'மாலத்தீவை சமமான பங்குதாரராக சீனா கருதுகிறது. மாலத்தீவின் இறையாண்மையை மதிக்கிறது. அதேபோல், மாலத்தீவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான நட்பு மற்றும் கூட்டுறவை சீனா மதிக்கிறது என்று அந்த நாடு கருத்து தெரிவித்துள்ளது.

இந்தியாவுடன் நல்லுறவுடன் இருப்பது மாலத்தீவுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை சீனா அறிந்திருக்கிறது. இந்தியா அவுட்” பிரச்சாரத்தின் பின்னணியில் ஆட்சிக்கு வந்த முய்ஸ/், ஜனாதிபதியான பிறகு சீனாவை தனது முதல் துறைமுகமாக மாற்றினார்.

”நாங்கள் சிறியவர்களாக இருக்கலாம், ஆனால் இது எங்களை கொடுமைப்படுத்துவதற்கான உரிமத்தை அவர்களுக்கு (இந்தியா) வழங்காது” என்று முய்ஸ/ தனது சீன பயணத்திலிருந்து திரும்பிய பிறகு, இந்தியாவைப் பற்றிய வெளிப்படையான குறிப்பில் கூறினார்.

முய்ஸு'வின் கடுமையான இந்திய-விரோத நிலைப்பாடு, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுள்ள பிரதான எதிர்க்கட்சியான மாலத்தீவு ஜனநாயகக் கட்சி (ஆனுீ), பதவி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை தொடங்க வழிவகுத்தது. மற்றொரு எதிர்க்கட்சித் தலைவரான ஜ/ம்ஹூ'ரி கட்சியின் காசுயிம் இப்ராஹிமும், இந்தியாவிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அதிபர் முய்ஸீக்கு வேண்டுகோள் பிறப்பித்து உள்ளார்.

இந்த நிலையில் இந்தியாவுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வருவதால் மாலத்தீவின் வருமானம் என்பது பெரிய அளவில் சரிந்துள்ளது. இத்தகைய சூழலில் தான் மாலத்தீவு திவாலாகி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் அந்த நாடு உதவி கேட்டு சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளதாக பரபரப்பான தகவல்கள் வெளியாகி உள்ளன.

இத்தகைய சூழலில் தான் பிரதமர் மோடி சமீபத்தில் லட்சத்தீவுக்கு சென்று போட்டோ வெளியிட்டார். மாலத்தீவின் சுற்றுலா துறையை முடக்கும் வகையில் உள்நோக்கத்துடன் லட்சத்தீவை பிரதமர் மோடி ப்ரோமோட் செய்வதாக அந்நாட்டு அமைச்சர்கள், எம்பிக்கள் கூறியதோடு இந்தியா குறித்து சர்ச்சை கருத்துகளை தெரிவித்தனர். இது இந்தியா-மாலத்தீவு இடையேயான பிரச்சனையை இன்னும் அதிகப்படுத்தியது.



தொடர்ச்சி 08ம் பக்கம் பார்க்க...

07ம் பக்கத் தொடர்ச்சி...

இதன் தொடர்ச்சியாக தனது முதல் வெளிநாட்டுப் பயணத்திற்கு துருக்கியை தேர்வு செய்துள்ள முய்சு, அங்கு புதிய மாலத்தீவு தூதரகத்தையும் தொடங்கியுள்ளார்.

இது குறித்து மாலத்தீவு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "மாலத்தீவு துருக்கியில் இருந்து தினசரி பயன்படுத்தும் பல பொருட்களை இறக்குமதி செய்து வருகிறது. தங்கள் நாட்டில் துருக்கிய முதலீட்டை ஊக்குவித்து வரும் அதே வேளையில் மாலத்தீவில் இருந்தும் துருக்கிக்கு ஏற்றுமதி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில் மாலத்தீவில் இருந்து துருக்கிக்கு கல்வி கற்கச் செல்லும் மாணவர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

முய்சுவின் துருக்கி பயணத்தைத் தொடர்ந்து மாலத்தீவின் துணை அதிபர் /ஹசைன் முகமது லத்தீஃப் சீனா சென்றிருந்தார். சீனா தலைமையில் நடந்த சீனா–இந்தியா வளர்ச்சி ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்றிருந்தார். அதே நேரம், இதேபோன்ற மற்றோர் அமைப்பான இந்தியப் பெருங்கடல் ரிம் அசோசியேஷன் குறித்து மாலத்தீவின் அணுகுமுறையோ அவ்வளவு நேர்மறையானதாக இல்லை.சீனா–இந்தியா வளர்ச்சி ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்தில் பேசிய லத்தீஃப் தனது நாட்டிற்கு சீனாவின் பங்கு முக்கியமானது என்று கூறியுள்ளார்.

துருக்கி மற்றும் சீனாவிற்கு மாலத்தீவு தலைவர்கள் பயணிப்பது இந்தியாவின் நலன்களுக்கு சாதகமான அறிகுறி அல்ல என்று நிபுணர்கள் கூறுகின்றனர். காரணம், சீனாவும் துருக்கியும் இந்தியாவின் நிலம் மற்றும் கடல்சார் பாதுகாப்புக்கு எதிரெதிர் நிலைப்பாடுகளை எடுத்து வருகின்றன.

1996-97 முதல் சர்வதேச அரசியல் நீல பொருளாதாரம் அல்லது பெருங்கடல் பொருளாதாரத்தில் இந்தியா அதிக கவனம் செலுத்தி வருவதாக" தெரிவிக்கிறார். இது இந்திய பெருங்கடல் அல்லது பசிபிக் பெருங்கலுடனான இந்தியாவின் நெருக்கம் கடல் தொடர்பான உத்தியில் இந்தியாவின் பாத்திரத்தை அதிகரித்துள்ளது.

அதிலிருந்து, தென் சீனக் கடல், அரபிக்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் ஆகியவற்றில் இந்தியா தனது ஸ்ட்ரேட்டஜிக் நலன்களில் கவனம் செலுத்தி வருகிறது. இதனால், மொரீஷியஸ், மாலத்தீவு, சீஷெல்ஸ் போன்ற நாடுகளில் இந்தியாவின் தொடர்புகள் அதிகரித்துள்ளது. கண்காணிப்பு, எரிபொருள் விநியோகம் மேலும் பல விஷயங்களில் இந்தியாவிற்கு இந்தப் பகுதிகளில் நலன்கள் உள்ளது. கடந்த 25-30 ஆண்டுகளில், இந்தியா இந்தப் பகுதிகளில் அதிக கவனத்தைச் செலுத்தி வருகிறது.

இந்தியாவிற்கு பொருளாதார மற்றும் மூலோபாய அடிப்படையில் மாலத்தீவின் முக்கியத்துவம் மிக அதிகம் என்று அறியப்படுகிறது .எனவேதான், மாலத்தீவில் புதிய அரசு ஆட்சிக்கு வரும் போதெல்லாம், அந்த அரசை ஓரளவிற்குத் தனது பக்கத்தில் வைத்திருக்க இந்தியா முயன்று வருகிறது.

சீனாவும் இந்தப் பகுதியில் தனது செயல்பாட்டை அதிகரிக்க விரும்புகிறது. ஆனால் இந்தியா அதற்கு முக்கியப் போட்டியாளராக இருந்து வருகிறது. "இந்தியப் பெருங்கடலில் தனது செல்வாக்கை அதிகரிக்க சீனாவும் அழுத்தம் கொடுத்து வருகிறது.

இதற்காக தற்போது தென்சீனக் கடலில் இருந்து வெளியே வந்து இங்கு தனது நடவடிக்கைகளை அதிகரித்து வருகிறது," என்று நம்புவதற்கு அதிக இடமுண்டு என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. மாலத்தீவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் சீனாவுக்கு சாதகமான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அது இந்தியாவில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். இது அடுத்த நான்கைந்து ஆண்டுகளில் வலுவாக வெளியே தெரியும். மாலத்தீவில் இந்திய வீரர்கள் மிகக் குறைவாக இருந்தாலும், அவர்கள் திரும்பி வருவது கவலை அளிக்க கூடிய விஷயமாக உள்ளது," என்பதே இந்திய வெளிவிவகார துறை சார்ந்த கவலையாக இருக்கிறது.

மாலத்தீவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் சீனாவுக்கு சாதகமான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அது இந்தியாவில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். இது அடுத்த நான்கைந்து ஆண்டுகளில் வலுவாக வெளியே தெரியும். மாலத்தீவில் இந்திய வீரர்கள் மிகக் குறைவாக இருந்தாலும், அவர்கள் திரும்பி வருவது கவலை அளிக்க கூடிய விஷயமாக இலங்கை, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் சீன முதலீட்டிற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. ஆனாலும், பூடான் மற்றும் மாலத்தீவில் தனது செல்வாக்கை வலுப்படுத்துவதில் சீனா வெற்றி பெற்றுள்ளது. இந்தியா பார்க்கிறது.

இலங்கை, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் சீன முதலீட்டிற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. ஆனாலும், பூடான் மற்றும் மாலத்தீவில் தனது செல்வாக்கை வலுப்படுத்துவதில் சீனா வெற்றி பெற்றுள்ளது.இந்த விஷயத்தில் சீனாவுடனான உறவின் மதிப்பை இந்த நாடுகள் புரிந்துகொள்ள விடுவதே இந்தியாவின் கொள்கையாக இருக்கலாம் என்று அவர் கூறுகிறார். காரணம் இப்போது சீனாவின் நிதியுதவி பல நாடுகளுக்குச் சுமையாக மாறியுள்ளது. எனவே அவர்கள் இந்தப் "பொறி"யில் இருந்து வெளியேற விரும்புகிறார்கள். அதே நேரம், "தொடக்கத்தில் இருந்தே முய்ஸ / இந்தியாவுக்கு எதிரான உத்தியையே கொண்டுள்ளார். அது அவரின் முடிவுகள் வாயிலாகவே கண்கூடாகத் தெரிகிறது. ஹைட்ரோகிராஃபி ஒப்பந்தம் ரத்து, இந்திய படைகள் திரும்பப் பெறுதல் உள்ளிட்டவை சீன கொள்கைகளுக்கு ஆதரவு அளிப்பது போலத்தான் உள்ளது. இது இந்தியா மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்," என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

"இஸ்லாமிய சித்தாந்தத்தின் பக்கம் மாலத்தீவு சாய்வதையும் கண்கூடாகவே பார்க்க முடிகிறது. தேசிய நலன் என்பது எந்த சித்தாந்தம் சார்ந்தோ அல்லது தலைவர் மற்றும் கட்சி சார்ந்தோ இருத்தல் கூடாது. ஆனால் சில நேரங்களில் வெளியுறவு கொள்கைகளில் அதைப் பார்க்க முடியும். குறிப்பாக மோடி தலைமையிலான இந்துத்துவ அரசாங்கம் உடனான கொள்கை கூட மாலத்தீவு அரசு மறு பரிசீலனை செய்வதற்கு கூட வாய்ப்பு இருக்கலாம்.

இதில் என்ன பிரச்னை இருக்கிறது என்பதை முதலில் பார்க்க வேண்டும். ஆனால் தற்போதைக்கு முய்சு இருக்கும் வரை, அங்கு ஒரு இஸ்லாமிய சார்பு தன்மை இருக்கலாம். மாலத்தீவின் பொருளாதாரத் தேவைகளில் சீனாவின் தலையீடு அதிகரிக்க அதிக வாய்ப்புள்ளது. இதனால் இது இந்தியாவின் பாதுகாப்புத் துறை, பொருளாதாரம் மற்றும் மூலோபாயக் கொள்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, இந்தியா தனது அண்டை நாட்டுக் கொள்கையில் இந்த பிரச்னைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்," .மாலத்தீவில் முய்சுவின் அரசு இருக்கும் வரை சீனாவின் இடையூறை குறைக்க முடியாத வரை இந்தியா 'காத்திருந்து கண்காணிக்கும்' உத்தியைப் பயன்படுத்தலாம் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வேளை இந்தியா மறைமுகமான செல்வாக்கை அங்கு உருவாக்க முயற்சி செய்யலாம்.ஏனெனில் அமெரிக்காவின் நம்பகமான கூட்டாளியாக தற்போது இந்தியா இந்த பிராந்தியத்தில் செயல்பட்டு வரும் சூழலில் இந்தியப் பெருங்கடல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ளன. எனவே, அமெரிக்கா மூலம் மாலத்தீவு மீது செல்வாக்கு செலுத்த இந்தியா முயற்சி எடுக்கலாம்.

மாலத்தீவு சீனாவை சார்ந்த நிலையில் இந்திய மறைமுகமாக சில பல இராஜதந்திர நடவடிக்கைகளை அந்த நாட்டில் ஏற்படுத்த முயலும் போது எதிர் கட்சிகளை இந்தியா பயன்படுத்தி கொள்ள வாய்ப்புண்டு என்பதையும் நாம் மறுக்க இயலாது...

இந்த நிலையில் இந்தியா மறைமுகமான செல்வாக்கை அங்கு உருவாக்க முயற்சி செய்யலாம்.ஏனெனில் அமெரிக்காவின் நம்பகமான கூட்டாளியாக தற்போது இந்தியா இந்த பிராந்தியத்தில் செயல்பட்டு வரும் சூழலில் இந்தியப் பெருங்கடல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ளன. எனவே, அமெரிக்கா மூலம் மாலத்தீவு மீது செல்வாக்கு செலுத்த இந்தியா முயற்சி எடுக்கலாம். தற்போதைய நிலையில் மத்திய தரைக்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தும் போட்டி, ரஷ்யா, உக்ரைன் இடையேயான போர் ஆகியவற்றின் காரணமாக சர்வதேச நாடுகள் அணைத்தும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் முறுகல் நிலை காணப்படுகிறது. இது சர்வதேச அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் மாறக்கூடிய சூழல் தற்போது தொடர்கிறது.

இந்த போட்டியில் இந்தியா, அமெரிக்கா ஆகிய இரண்டு தேசங்களின் தோழமைகள் தாண்டி சீனா இந்த பிராந்தியத்தில் தனது வல்லாதிக்க நிலையை உறுதிபடுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க திட்டமிடலாம் என்பதே தற்போதைய யதார்த்தமான உண்மையாகும்.

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## கானல் நீராகி விடக் கூடாத வக்பு சட்டத் திருத்தம்

வக்பு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்ற அவசியம் உணரப்பட்டு இது பற்றி ஆராய்ந்து திருத்தங்களை சமர்ப்பிக்க மத விவகார அமைச்சர் ஒரு குழுவை நியமித்துள்ளார். இந்த நாட்டிலே முஸ்லீம்கள் விடயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்று சட்டங்கள் உள்ளன. ஒன்று வக்பு சட்டம். சொத்துக்கள் பள்ளி நிர்வாகிகள் தொடர்பாக வக்பு சட்டம் உள்ளது. வக்பு சட்டத்தை செயல்படுத்த வக்பு சபையும், அது பற்றிய நீதி மன்றமாக வக்பு நியாய மன்றம் உள்ளது.

அடுத்தது வாரிசூரிமைச் சட்டமாகும். இறந்த முஸ்லிம்களின் சொத்துப் பிரிவினை தொடர்பான சட்டமாகும்.

மற்றது விவாகம், விவாகரத்து தொடர்பான சட்டமாகும். இதை செயல்படுத்த முஸ்லீம்களுக்கு தனியான விவாகப் பதிவாளர்களும் குடும்ப நீதிமன்றமாக காதி நீதிமன்றமும் உள்ளது.

இதில் இரண்டு சட்டங்கள் தொடர்பாக சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விவாக விவாகரத்துச் சட்டங்கள் தொடர்பான திருத்தங்கள் முன் வைக்கப்பட்டுள்ள. அவற்றில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு எதுவுமே நடக்காத நிலை உள்ளது. இரண்டு குழுக்கள் முன் வந்து சிபாரிகளை சமர்ப்பித்தன. அவை ஒன்றுக்கொன்று முரண்பாட்டு போரிட்டு வருகின்றன. இரண்டுமே பிழை என்று கூறும் ஒரு கூட்டமும் உண்டு.

இந்த இரண்டு குழுக்களுக்குள்ளும் கிளைப் பிரிவுகள் தோன்றி தங்கள் கருத்துக்களையும் எதிர்ப்புகளையும் முன்வைத்து வருவது எதுவுமே நடக்காத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

விவாக, விவாக ரத்துச் சட்டத்தில் எந்த மாற்றம் தேவையில்லை என்று கூறும் குழுவும் உள்ளது. இவர்கள் கருத்துக்கள் காலத்துக்கு ஒவ்வாததாகும். நபிகள் நாயகம் ஒட்டகத்தில் பயணம் செய்தார்கள். எனவே இப்போது நாமும் ஒட்டகத்தில்தான் பயணம் செய்ய வேண்டும் எனக் கருதும் இந்தக் குழுவின் நிலை காலத்துக்கு ஒவ்வாததாகும். குர்ஆன் ஹதீஸ்"க்கு மாற்றம் இல்லாது இஜ்மா வருவதை பிழையாக எடுக்க முடியாது.

இந்த விவாக, விவாகரத்துச் சட்டத் திருத்தங்கள் முடிவில்லாது காலம் கடத்தப்படுவதால் எதுவுமே நடப்பதாக தெரியவில்லை.

இந்த நிலையில் வக்பு சட்டத் திருத்த விடயங்களும் முன்வைப்பப்படவுள்ளன. பள்ளி, மத்ரஸாக்களின் சொத்துக்கள் தொடர்பாக நாட்டில் பல இடங்களில் பிரச்சினை எழுந்துள்ள நிலையிலும் பள்ளி, மத்ரஸா சொத்துக்கள் பறிபோகும் பயங்கர நிலையிலும் இந்த வக்பு சட்டத் திருத்தம் அவசியமாக உள்ளது. அவசியமாக மட்டுமல்ல அவசரமாகவும் உள்ளது.

பள்ளி சொத்துக்கள் மத்ரஸா சொத்தக்கள் வக்பு சட்டத்தால் ஆளப்படுகின்றன. ஆனால் அது பலம் சொருத்தியதாகவும் இல்லை. ஓட்டைகள் உள்ளன. அந்த ஓட்டைக்குள் நுழைந்து பொதுச் சொத்துகக்ள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. சில நிர்வாகிகள் கூட இவற்றை சொந்தமாக்கிக் கொண்டிருக்கின்றனர். சிலர் சிறிய தொகையை வாடகையாக பள்ளிக்குக் கொடுத்துவிட்டு அதை மற்றவருக்கு வாடகைக்குக் கொடுத்து பெருந்தொகை பணத்தை சம்பாதிக்கின்றனர். பள்ளி, மதிரஸா நிர்வாகம் தொடர்பான அதிகரமும் வக்பு சபைக்கு இருந்தாலும் அவை பலமானதாக இல்லை. இவற்றிற்கு பொதுவான யாப்பு இல்லை. அவரவருக்கு இலாபரமான வகையில் யாப்புக்களை அமைத்துக் கொண்டு பதவிகளை பிடித்துக் கொண்டு பள்ளி, மத்ரஸா சொத்துக்களை தமது விருப்பப்படி பயன் படுத்துகின்றனர்.

பள்ளி, மத்ரஸா சொத்துக்களை பொறுத்த வரை இன்னுமொரு முக்கிய பிரச்சினை உள்ளது.

பள்ளி, மத்ரஸாக்கள் சட்ட அமைப்பாக கருதப்படுவதில்லை. எனவே, நேரடியாக பள்ளி, மத்ரஸாக்களின் பெயரில் சொத்துக்களை வாங்கவோ. வைத்திருக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியாது. இது ஆங்கிலேயர் காலத்திலிருந்து இருக்கிறது.

பௌத்த விகாரைகளின் பெயரிலும் முன்னர் சொத்து வைத்திருக்க முடியாது. குருமாரின் பெயரிலேயே வைத்திருக்கலாம். எனினும் ஓமாரே தம்மபால தேரர் எதிர் ராஜபக்ஸகே பீரிஸ் வழங்கிலே உயர் நீதிமன்றம் விகாரைகள் தாமாகவே உருவாக்கிய நிறுவனம். அவற்றிற்கு சொத்துக்களை விகாரையின் பெயரில் வைத்திருக்கவும் விகாரையின் பெயரின் பெற்றுக் கொள்ளவும் முடியும். எனத் தீர்ப்பளித்தது. இதன்படி விகாரைகளின் பெயரில் சொத்துக்களை வைத்திருக்கலாம்.

ஆனால் பள்ளி வாசல்களுக்கும் மத்ரஸாக்களுக்கும் இந்த சட்ட அந்தஸ்து இல்லை. எனவே அவற்றின் பெயரில் சொத்துக்களை வைத்திருக்கவோ வாங்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியாதுள்ளது. இதனால் ஆரம்பம் தொட்டு இன்று வரை தனிப்பட்ட பெயரில் சொத்துக்கள் வாங்கப்படுகின்றன. சிலவற்றில் நிர்வாகிகளின் பெயரில் வாங்கி குறிப்பிட்ட பள்ளிகளின் டிரஸ்டிமார் என்று மட்டும் குறிப்பிடப்படுகிறது.

நீண்ட காலம் சென்ற பின் அதாவது சில பரம்பரைகள் சொன்றபின் அந்தப் பரம்பரையினர் அவற்றிற்கு உரிமை பேசத் தொடங்கிவிடுகின்றனர். பள்ளியிலிருந்து தொலைவில் உள்ள காணிகள் முன்னிருந்த டிரஸ்டியின் பேரப்பிள்ளைகளாளும் அவர்களத பிள்ளைகளாலும் விற்கப்பட்ட சம்பவங்கள் உள்ளன.

இதற்கு காரணம் பள்ளி, மத்ரஸா பெயர்களில் நேரடியாக சொத்து இல்லாமையாகும். அதற்குக் காரணம் பள்ளி மத்ரஸா என்பவை சட்ட அந்தஸ்து இல்லாதமையாகும்.

எனவே, வக்பு சட்டம் திருத்தம்படும்போது பள்ளி, மத்ரஸா போன்றவை சட்ட அந்தஸ்துள்ள அமைப்புக்கள் என்ற திருத்தம் கொண்டு வர வேண்டும். அவ்வாறு வந்தால் பள்ளி, மத்ரஸாக்களின் பெயரில் சொத்துக்களை வாங்கலாம். வைத்திருக்கலாம். கொடையாகப் பெறலாம்.

அத்தோடு இப்போது தனியார் பெயர்களில் உள்ள பள்ளி மத்ரஸா சொத்துக்களை வெளிப்படுத்துகை உறுதி மூலம் பள்ளி, மத்ரஸா சொத்துக்களாக மாற்றிக் கெர்ளக்கூடிய வகையிலான திருத்தங்களும் கொண்டு வரப்பட வேண்டும்.

வக்பு நியாய மன்றம் மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு சமமான நீதிமன்றமாக மாற்றப்பட தேவையான திருத்தங்களும் கொண்டு வரப்பட வேண்டும்.

முஸ்லிம் விவாக, விவாகரத்து விவகாரங்கள் காதி நீதிமன்றத்தினால் மாத்திரம் விசாரிக்கப்படுவது போன்று பள்ளி, மத்ரஸா சொத்துக்கள் பள்ளி, மத்ரஸா நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகளை வக்பு நீதிமன்றம் மாத்திரம் விசாரிக்கும் என்ற நிலை வர வேண்டும். இவற்றை மாவட்ட நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதை தடை செய்ய வேண்டும்.

அத்தோடு பள்ளி மத்ரஸா அவற்றின் நிர்வாகத்திற்கு ஒரு பொதுவான யாப்பை அறிமுகப்படுத்த வேண்டும். இந்த யாப்பு ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். இதை அமைக்கும் அதிகாரமும் கண்காணிக்கும் அதிகாரமும் வக்பு சபைக்கு வழங்கப்படவேண்டும். அரசியல் செல்வாக்கை பாவித்து விஷேட நிர்வாகிகளை நியமிக்கும் அதிகாரம் இல்லாது செய்யப்பட வேண்டும். கண்காணிக்கும் அதிகாரத்தை மாத்திரம் வக்பு சபை வைத்திருக்க வேண்டும்.

# மினுவான்கொட, கல்லொலுவையில் உலமாக்கள் கௌரவிப்பு





(அரபாத் பஹுர்தீன்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா மினுவான்கொட கிளை ஏற்பாடு செய்திருந்த உலமாக்களும், கல்விமான்களும் விருது கொடுத்து கௌரவிக்கும் நிகழ்வு (23) கல்லொலுவ ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

மினுவான்கொட பிரதேசத்தை சேர்ந்த கடந்த 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரப்புக் கல்லூரி மற்றும் ஜாமிய்யா நமீபியா அரபுக் கலாசாலை ஆகியவற்றிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய உலமாக்களுக்கு விருது கொடுத்து கௌரவிக்கும் நிகழ்வு இன்றைய தினம் ஜும் ஆத் தொழுகையைத் தொடர்ந்து அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா மினுவான்கொட கிளையின் தலைவரான அஷ்ஷெய்க் மௌலவி ரிஸ்வான் அவர்களின் தலைமையில் கல்லொலுவ ஜ/ம் ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள முன்னனி அரபுக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று வெளியேறி, கௌரவிப்பிற்காக அழைக்கப்பட்ட 20 உலமாக்கள் தமது தந்தையர்களுடன் வந்து விருதுகளையும், பரிசில்களையும் பெற்றுச் சென்றனர்.

அத்தோடு கல்லொலுவ ஜும் ஆப் பள்ளிவாசலில் கீழ் இயங்கிவரும் ஹசனிய்யா தக்யா பள்ளிவாசலில் சுமார் 15 வருடங்களாக இமாமாகக் கடமையாற்றி விடைபெற்றுச் சென்ற அஷ்ஷெய்க் மௌலவி சப்ரி அவர்களுக்கும் விருது வழங்கப்பட்டது.

மேலும் இப் பிரதேசத்தை சேர்ந்தவர்களும் இப் பிரதேசத்தின் அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்களாகக் கடமையாற்றி தற்சமயம் அதிபர் நியமனம் பெற்று மல்வானை மஹ்மூத் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றும் எம்.எம்.எம். ரிம்சான் அவர்களுக்கும், கல்லெலிய அலிகார் தேசிய பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றும் எம்.எஸ்.எம். சஸ்ரின் அவர்களும் இந்நிகழ்வில் விருதும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் பல உலமாக்களை உலகுக்கு வழங்கியிருக்கும் கல்லொலுவ நிலாமிய்யா அரபுக் கல்லூரியின் ஸ்தாபகரும், தலைவரும் இன்றைய நிகழ்வின் பிரதம அதீதியுமான அல்ஹாஜ் முஹம்மது முனாஸ் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும்
# காணி நிருவாகப் பாரபட்சம்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

முஸ்லிம்கள் என்ற ஒரே ஒற்றைக் காரணத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் பல விடயங்களில், குறிப்பாக நிருவாக விடயங்களில் மாவட்ட நிருவாகத்தினால் பாரபட்சத்திற்கும் புறக்கணிப்பிற்கும் உள்ளாக்கப்பட்டு வந்துள்ளார்கள் என்பது வெளிப்படை என்கிறார் ஓட்டமாவடியைச் சேர்ந்த எழுத்தாளர், மூதறிஞர், மக்கத்துச் சால்வை எஸ். எல்.எம். ஹனீபா.

பயங்கரவாதமென்பது ஒரு சமூகத்திற்கெதிராக அத்துமீறிய அடக்குமுறையை ஏதாவதொரு அடிப்படையில் பயன்படுத்துவதேயாகும். அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் எல்ரீரீஈ,யக்கத்தினரால் ஆயுதமுனையில் முஸ்லிம்கள் மீது பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.


இப்பொழுது அரசாங்கத்தினால் ஆயுதப் பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நிலையில் முஸ்லிம் சமூகத்தின் மீது மாவட்ட அதிகார மட்டத்தினால் நிருவாகப் பயங்கரவாத ஆதிக்கம் பிரயோகிக்கப்பட்டு பல்வேறுபட்ட வழிமுறைகளிலும் முஸ்லிம் மக்களுக்கு பலவிதமான அநீதிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிகழ்த்தப்பட்டுக் கொண்டு வருகின்றது.

இதற்குச் சான்றாக பல உதாரணங்களை முன்வைக்க முடியும், என்று கூறும் எஸ்.எல்.எம் ஹனீபா, தொடர்ந்து வரலாற்றுத் தவறுகளை நினைவூட்டுகிறார், இந்த மாவட்டத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய பல கிராமங்கள் உள்ளன.

ஆனால், வெளியேற்றப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்தினால் இதுவரை எந்தவொரு மீள் குடியேற்றமும் இடம்பெறவில்லை. இது அரச அதிகாரத்தை முஸ்லிம் சமூகத்துக்கெதிராக பயன்படுத்தும் நிருவாகப் பயங்கரவாதமாகப் பார்க்கப்பட வேண்டியதாகி உள்ளது.

விடுதலையின் பெயரால் நிகழ்ந்த எத்தனையோ வேண்டத்தகாத சங்கதிகளில் தமிழ் முஸ்லிம் உறவும் பாழ்பட்டுப் போனது. எந்தவொரு தமிழ் இயக்கத்தாலும் குட்டுப்படாத, நஷ்டப்படாத முஸ்லிம்களே இல்லை.

விடுதலைப் போராட்டம் தொடங்கிய 1978 இல் இருந்து மெல்ல மெல்ல கசப்புகள் உருவாகத் தொடங்கின. எல்லாத் தமிழ் இயக்கங்களும் முஸ்லிம்களையும் நெருக்கத் தொடங்கினார்கள்.



1985இல் கிழக்கில் இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் இனச்சங்காரம் இந்தக் கசப்பை உச்சத்திற்குக் கொண்டு சென்றது. இன்னமும் முஸ்லிம்களை விரோதிகளாகப் பார்க்கும் தமிழ் சமூகத்திலுள்ள ஒரு சாரார் தமிழர்களுக்கு அநீதி இழைத்ததாக ஆண்டு தோறும் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் தமிழ்த் தரப்பைச் சேர்ந்த விடுதலை இயக்கங்களும் தனி நபர்களும் முஸ்லிம்களுக்குச் செய்த அநீதிகளையும் அட்டூழியங்களையும் இவர்கள் நடுநிலை நின்று தமிழ் சமூகத்திற்குச் சொல்லுவதேயில்லை. ஓட்டமாவடியில் வாழ்ந்த தமிழ் மக்களை முஸ்லிம்கள் ஒருபோதும் மிரட்டவுமில்லை விரட்டவுமில்லை. அவர்கள் வாழ்ந்த நிலங்களை அபகரிக்கவுமில்லை. அப்படிப் பிரச்சாரம் செய்வது அபத்தமானது, அநியாயமானது என்று ஆதங்கப்படுகிறார் வரலாற்றாய்வாளர் ஹனீபா.

ஓட்டமாவடியில் அமைந்திருந்த அரை காணியை பரீதா மர ஆலை உரிமையாளர் அல்ஹாஜ் புஹாரி 1989.07.20ம் திகதி 75 ஆயிரம் (எழுபத்தி ஐயாயிரம்) ரூபாவுக்கு வாங்கினார்.

இதை அறிந்த எல்ரீரீஈ இயக்கத்தினர் புஹாரி ஹாஜியாரை இரவோடிரவாக கடத்தி கறுவாக்கேணியில் அடைத்து வைத்தார்கள். அன்று நள்ளிரவு ஒரு மணியளவில் கறுவாக்கேணியில் நான் எல்ரீரீஈ இனரைச் சந்தித்து, நடந்த விடயங்களை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி அவரை விடுவித்ததுமல்லாமல் கறுவாக்-கேணி முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையிடமிருந்து ஒரு கடிதத்தையும் பெற்றுக் கொண்டேன்.

1989.07.25அம் திகதி எமது முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையின் கூட்டம் தலைவர் எம். மகாதேவன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. ஓட்டமாவடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் அமைந்திருந்த காணியை சதாசிவம் கனகசூரியம், கதிரவேல் சீனித்தம்பி, நல்லதம்பி சிவலிங்கம் ஆகியோரின் தந்தைமார் கையேற்றதன் பிரகாரம், மேற்கூறப்பட்டவர்களின் பிள்ளைகள் என்ற முறையில் அக்காணியை விற்று, இப்பணம் முழுவதையும் கறுவாக்கேணி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய நற்பணிக்காக, மேற்படி ஆலய நிருவாகத்துடன் இணைந்து செலவு செய்வதற்கு எங்களுக்கும் இப்பரிபாலனத்திற்குட்பட்ட மக்களுக்கும் சம்மதம் என்பதை சா. ரவீந்திரன் பிரேரிக்க, ந.குமரய்யா என்பவர் ஆமோதித்தார். இதனை ஆலய பரிபாலன சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது என்கிறார் கடிதத்தின் மூலப் பிரதியை இப்பொழுதும் தன்வசம் வைத்துக் கொண்டுள்ள எழுத்தாளர் மக்கத்துச் சால்வை நூலாசிரியர் எஸ்.எல்.எம். ஹனீபா.

மட்டக்களப்பு நகரமும் கள்ளியங்காடு

கிராமமும் நாட்டின் வடக்கு மாகாணம் என்றால் அதற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் யாழ்ப்பாணம். அதைப்போல கிழக்கில் மட்டக்களப்பு நகர் பிரபலமானது. அவ்வாறான மட்டக்களப்பு நகர் இன்றளவும் முஸ்லிம்களின் வர்த்தகம் மற்றும் இருப்பு ஆகியவற்றினால்தான் கலகலப்பாக உள்ளது என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாது.

மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் காத்தான்குடி முஸ்லிம்களால் நடத்திச் செல்லப்படுபவை. யுத்த காலத்தில் தமிழர் பிரதேசங்கள் அச்சத்தினால் சோபை இழந்து காணப்பட்டபோதிலும் மட்டக்களப்பு நகரில் முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளே நகரை உயிரோட்டமாகவும் கலகலப்பாகவும் வைத்திருக்க உதவியது.

அத்துடன், தமிழ் மக்களுக்கான அச்சமற்ற ஒரு பாதுகாப்பு அரணாகவும் மட்டக்களப்பு நகரம் யுத்த காலத்தில் திகழ்ந்தது.

கள்ளியங்காடு முஸ்லிம் கொலனி முஸ்லிம்களின் பூர்வீகம் அழிப்பு பின்னணியில் பிரதேச செயலாளர்.

மட்டக்களப்பு நகரோடு இணைந்ததாக நகரிலிருந்து சுமார் 2 கிலோமீற்றருக்கும் குறைவான தூரத்தில் மட்டக்களப்பு கொழும்பு நெடுஞ்சாலையை அண்டியதாக இலங்கைப் போக்குவரத்து சபை மட்டக்களப்பு சாலைக்கு முன்னால் அமைந்துள்ளது கள்ளியங்காடு கிராமம். இந்தப் பகுதி மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் நிருவாகத்திற்குட்பட்டது.

கள்ளியங்காடு முஸ்லிம் கொலனி கிராமத்தின் தோற்றமும் வரலாறும் மட்டக்களப்பு வாழ் முஸ்லிம்களின் பல நூற்றாண்டுகால மையவா-டியாக கள்ளியங்காடு இன்றளவும் உள்ளது. அதேவேளை பூர்வீகமாக ஏனைய ஹிந்து, கிறிஸ்தவ சமுதாயத்தினரதும் மயா-னம் சேமக்காலை என்பனவும் முஸ்லிம்களின் மையவாடியை அண்டி அமைந்துள்ளதால் இந்த இடம் இன்றளவும் சமூக ஐக்கியத்துக்கான ஒருங்கிணைவுப் புள்ளியாக இருந்து வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புளியந்தீவு (மட்டக்களப்பு நகர்), கோட்டமுனை ஆகிய பகுதிகளில் இன்றளவும் வாழும் முஸ்லிம்களும் கள்ளியங்காடு முஸ்லிம் கொலனிப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களும் தமிழ் முஸ்லிம் ,ன நல்லுறவுக்கு சாட்சியானவர்கள்.

அங்கு வாழும் மக்களுக்கிடையே எந்தக் காலத்திலும் இன முறுகலோ, சண்டை சச்சரவுகளோ ,டம் பெறவில்லை. இரு சமூகங்களும் மிகவும் அன்னியோன்னியமாக பல்வேறுபட்ட இன முறுகல் ஆயுத அடக்குமுறை நில-விய காலங்களிலும் ,ணைந்து வாழ்ந்ததற்கு மட்டக்களப்பு நகரம் ஒரு நல்ல உதாரணமாகும்.

ஆயினும், அதே இடத்தில்தான் அதிகார மட்டத்திலுள்ளோரால் இன விரிசலுக்கான அத்திவாரமும் இடப்பட்டு அது இப்பொழுது தசாப்தங்களைக் கடந்துள்ளது என்பதும் கசப்பான உண்மையாகும்.

மட்டக்களப்பு புளியந்தீவு, கோட்டமுனை பகுதிகளில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் மையவாடியாக கள்ளியங்காடு விளங்கியது, அதுபோலவே ஹிந்துக்களின் மயா-னம், கிறிஸ்தவர்களின் சேமக்காலை ஆகியனவும் அருகருகே கள்ளியங்காட்டில் அமைந்துள்ளன.

மட்டக்களப்பு - கோட்டமுனையில் வாழ்ந்த முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் நகருக்குள் உள்ள இடப்பற்றாக்குறை, காரணமாக அரச காணியான கள்ளியங்காடு எனும் பகுதியில் காடு வெட்டி குடியேறத் தொடங்கினர்.

அந்தப் பகுதியில் கள்ளி மரங்கள் நிறைந்திருந்ததால் அப்பகுதி கள்ளியங்காடு என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டது. அதேவேளை, முஸ்லிம்கள் அப்பகுதியில் குடியேறிய பின்னர் முஸ்லிம் கொலனி என்றே அழைக்கப்பட்டு வந்தது.

கள்ளியங்காட்டில் குடியேறிய முஸ்லிம் சமூகச் சிறார்களின் கல்விக்காக ஸாஹிறா வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை-யும், முஸ்லிம்களின் மார்க்க வழிபாட்டுக்காக மஸ்ஜிதுல் பிர்தௌஸ் என்ற பெயரில் ஒரு பள்ளிவாசலும் 1965ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.



**(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம்தொடர் வரும் வாரமும் வரும்)**






நாச்சியாதீவு பர்வீன்

## போதை கொண்ட மாந்தர்

அடிமீது
அடிவாங்கி
அடுக்
களைக்கு
வந்தாலும்
அதிகாரம்
தரும்போதை
அடிமனசில்
ஒட்டியிருக்கும்

பதவிமீதான
பகட்டுப்போதை
சகட்டுமேனிக்கு
சலாம்போடும்
பொன்மீது பொருள்மீது
மண்மீது அவள்
கண்மீதென
போதையின் வடிவம்
ஆளுக்காள் வேறுபடும்

போதைகொண்ட மாந்தர்
பூமியிலே பலர்உளர்
பாதைமாறி பயணிக்கும்
பகட்டான மனிதரிவர்

அடுக்கடுக்காய்
ஆசைகளை
அடிமனசில்
அடுக்கிவைத்து
மிடுக்காக நடக்குமிந்த
மித்திரரை
என்னவென்பேன்

குடிமூழ்கிப் போனாலும்
குடிமீதுகொண்ட போதை
குடிகாரன் நெஞ்சைவிட்டு
குடிபெயர்ந்து போகாது

மதத்தின் மீதான போதை
மனிதத்தை
தொலைத்துவிடும்
சொல்லாத போதைகள்
பலவுல
போதையற்ற நாட்டை
அடைய
பாதையொன்றை
சொன்னால்
நடந்து சென்றாவது
அங்கு நங்கூரம் இடலாம்.

# எளிமையான வரிகளில் சுவர்க்கங்களை வரைதல்

கவிதைகளை எளிமையான வரிகளில் சொல்வது என்பது அவ்வளவு இலகுவான ஒரு பணி அல்ல.. பிரித்துப் பார்க்கவும் புரிந்து கொள்ள முடியாமலும் இடியாப்பத் தமிழில் எழுதுகிறவர்கள் மத்தியில், நண்பர் அஷ்ரப் சிஹாப்தீன் எப்போதும் தன் கவிதைகளை மிக இலகு தமிழில் மயிலிறகு போல சொல்லுவதில் அதிக கவனம் எடுப்பவர்.

இந்த ''சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்'' என்ற கவிதை நூலும் அதற்கு ஒரு சான்றாக இருக்கிறது.

50 கவிதைகளும், போனஸாக சில குறும்பாக்களும் கொண்ட இத்தொகுதியில் உள்ள அநேக கவிதைகள் கொரோனா முடங்கல் காலத்தில், நாட்டில் நிகழ்ந்த பல நிகழ்வுகளின் அக-புற தாக்கங்களின் வெளிப்பாட்டுணர்வுகளை பதிவு செய்துள்ளன..

ஒவ்வொரு கவிதையாக படிக்கும் போது அந்தந்தக் காலங்களும், சம்பவங்களும் மனதில் நிழலாடிச் செல்கின்றன. சில கவிதைகளில், இயல்பாக வந்து விழுகிற அங்கதச் சுவை நம்மை அவரோடும், அந்தக் கவிதைகளோடும் மிக ஈர்க்கச் செய்து விடுகின்றன. இன்னும் சில கவிதைகளில், அரசியலாளர்களின் இழிகுணத்தை உரத்துச்சொல்ல அவர் தேர்ந்தெடுத்திருக்கும் உக்கிரத் தமிழ், நூலின் பல பக்கங்களிலும் எரிந்து கொண்டிருக்கின்றன..

எழுத்தில், ஒவ்வொரு சொல்லையும் இலாவகமாகவும், கச்சிதமாகவும் பொருத்தும் அஷ்ரப் சிஹாப்தீன் அவர்களின் நீண்ட கால எழுத்தனுபவம் இத் தொகுதியின் ஒவ்வொரு பக்கத்திலும் மிளிர்கிறது. சமீபகாலத்தில் நான் முழு ஈடுபாட்டுடனும், ஒரே மூச்சிலும் வாசித்த ஒரு அருமையான நூல் இது.

சொற்களைக் கையாளும் நேர்த்தியை, 'சொல்' என்ற தன் கவிதையில் கவிஞர் சொல்லும், பாங்கு அலாதியானது...பாருங்கள்:




## சொல்

ஒரு சொல்லை முன் வைப்பது
மழை நாளொன்றில்
இஞ்சித் தேநீர் அருந்த
கருப்பட்டித் துண்டு
தருதலை யொத்தது.

புளிமாங்காய் சப்ப
உப்புக்கல்
சேர்ப்பதற்கொப்பானது
ஒரு சொல்லைப் பயன்படுத்துவது
கட்டப்படும் சுவரில்
செங்கல்லை
நூல் பிடித்து வைப்பது போன்றது
ஒரு சொல்லைப் பொருத்துவது

அவித்த மீனின் முள்ளகற்றிச்
சதை பிரித்துச்
சுண்டலுக்குள் இட்டுக்
கடையும் செயற்பாடு இது.
சர்வாதிகாரி பயணம் போகும்
வாகனத்தில்
ஒரு வெடிகுண்டைப்
பொருத்தும் நுட்பம் வேண்டுவது

கூட்டமாய் நிற்கும் கிளிகளுக்குள்
காதலி மட்டும்
கண்டுகொள்ளும் வகையில்
கண்ணடிப்பது , அல்லது,
கடிதம்
கைமாறும்கவனத்துக்குரியது
மேலும்,
திருமணத்தின் போது
மனைவியின் விரலுக்கேற்ற அளவில்
ஒரு மோதிரத்தை
அணிவிப்பதற்கீடானது.

எம்.கே.எம். ஷகீப் அவர்களின், கைவண்ணத்தில் உருவான அட்டைப்படமும், அழகும் நேர்த்தியும் மிக்க தளக் கோலமும், கொண்டு யாத்ரா வெளியீடாக வந்துள்ள இந்நூலை கொணர்ந்துள்ள நண்பர் அஷ்ரப் சிஹாப்தீன் அவர்களுக்கு பாராட்டுகளும், வாழ்த்துகளும்......

# மெல்போர்ன் USMAA அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இஸ்லாமிய கலாச்சார கண்காட்சி












(அஷ்ரப் ஏ. சமட்)

ஐக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் அசோசியேஷன் ஆஃப் ஆஸ்திரேலியா மெல்போர்ன் நகரில் 17 பிப்ரவரி 2024 அன்று மெல்போர்னில் உள்ள மல்கிரேவ் சமூக மையத்தில் இஸ்லாமிய கலாச்சார கண்காட்சி-2024 ஐ ஏற்பாடு செய்தது.

இது இந்தோனேஷியா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட பன்முக கலாச்சார நிகழ்வாகும்.

மேலும் இவ்வாறான ஒரு நிகழ்வில் மெல்போனில் வசிக்கும் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்கள் கலந்துகொண்டது இதுவே முதல் தடவையாகும்.

இந்த திட்டம் பாலஸ்தீனத்திற்கு நிதி திரட்டுவதற்காக நன்கொடைகள் மற்றும் ஏலத்தில் இருந்து $10,000/-க்கு மேல் சேகரிக்க முடிந்தது.

எக்ஸ்போவில் டூயட் இசை, பேச்சுகள், வில்வித்தை காட்சிகள், ஹிஜாப் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் இறுதியாக கலை ஏலம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடை பெற்றது.

# நிகஃகொல்லந்தழுவ முஸ்லிம் வித்தியாலய வித்தியாரம்ப விழா





(ஏ.எம்.எம். இப்றாஸ்)

நிகஃகொல்லந்தழுவ முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப நிகழ்வு அண்மையில் அதிபர் எஸ்.எச்.எம். சபீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கோட்டக்கல்வி பணிமனையின் ஆசிரிய ஆலோசகர் யுளுஆளு. பஸ்மி அஹமட் அவர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரிய ஆசிரியைகளும் கலந்து சிறப்பித்தனர்.




ஜீலான் மத்திய நவோதய கல்லூரியில் (தேசிய பாடசாலை) நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பழைய மாணவிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய

ஏ. எம்.றிஸ்னி அஹமட் அவர்களை கௌரவித்து சேவைக்கால விருதை அதிபர் ஏ. எம்.ஹலீம் மஜீத் வழங்கி வைப்பதையும் அருகில் பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் எம். ஆர்.எம்.றிழ்வான் இஸ்லாஹி, பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.ஏ.ஸீ. எம்.இம்தாத், பழைய மாணவிகள் சங்க செயலாளர் பஸ்னா இக்பால் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(பரீட் இக்பால்)

# மன்னாரை அச்சுறுத்தும் ‘அதானி’ நிறுவனத்தின் காற்றாலைகள்



ஆதில் அலி சப்ரி

உலகம் மிக வேகமாக நிலைபேரான மற்றும் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. பருவகால மாற்றம் மற்றும் அதன் பூகோள தாக்கங்கள் உலக நாடுகளை இவ்வாறான சக்தி மூலங்களில் கவனம் செலுத்த வைத்துள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகள் 2030 அல்லது 2040ஆம் ஆண்டளவில் எரிபொருள் பாவனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, முழுமையாக புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாட்டிற்குச் செல்லும் திட்டத்துடன் பயணிக்கின்றன.

வளர்முக நாடுகள் புதுப்பிக்கத்தக்க சக்தி மாற்றத்திற்கு செல்வதில் எண்ணிலடங்கா சவால்கள் காணப்படுகின்றன. சூரிய சக்தி, காற்றாலை அல்லது கடல் அலை உட்பட பல்வேறு சக்தி மூலங்களும் இலவசமாக இருந்தாலும், அவற்றை ஒருமுகப்படுத்தி, பயன்பாட்டிற்குள் கொண்டுவரும் செயற்பாடு பெரும் பணச் செலவைக் கொண்டதாகும்.

இலங்கை ஒரு வளர்முக நாடாக இருந்தாலும் சூரிய மற்றும் காற்றாலை சக்தி மூலங்களைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யும் திட்டங்களில் நீண்ட காலமாகக் கை வைத்துள்ளமை பெருமைப்படக் கூடியதுதான். இருந்தாலும், பருவநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களில் இருந்து உலகை மீட்பதற்கான முயற்சியாகக் கூறப்படும் நிலைபேரான மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை உற்பத்தி செய்யும் திட்டங்கள், நாட்டுக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிப்பதாக அமைய முடியுமா?

இலங்கை மின்சார சபை மன்னார் தீவில் 30 காற்றாலைகளை நிர்மாணித்து, அதன் மூலம் பிறப்பிக்கப்படும் 103 மெகா வாட் மின்சாரம் 2020ஆம் ஆண்டு முதல் தேசிய மின்னோட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ளமை எமக்குத் தெரிந்த விடயமே. இலங்கையின் முதலாவது பெரிய காற்றாலை மின்னுற்பத்தித் திட்டமான இது, மன்னார் காற்றாலை மின்சார உற்பத்தி நிலையம் அல்லது தம்பபவனி மின்சார உற்பத்தி நிலையம் எனப்படுகிறது.

இந்நிலையில், மன்னாரில் தம்பபவனி மின்சார உற்பத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிக்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அது 21 காற்றாலைகளை உள்ளடக்கியதாகவும் மக்கள் குடியிருப்புகளை அண்மித்ததாகவும் திட்டமிடப்பட்டுள்ளமை கவலை தருகின்றது.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை அல்லது குறிப்பாக புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தித் திட்டத்தை எதிர்க்கும் மனநிலையில் மக்கள் இல்லை. என்றாலும், தமது வாழ்வாதாரத்தையும் இயல்பு வாழ்க்கையையும் கேள்விக்குறியாக்கும் இந்தத் திட்டத்தை மன்னார் தீவு மக்கள் எதிர்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் காற்றாலைத் திட்டத்திற்குப் போட்டியாக, இந்தியாவின் அதானி நிறுவனமும் மன்னார் தீவில் புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தித் திட்டத்தில் இறங்கியுள்ளது. அதானி நிறுவனம் 250 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முயற்சியில் 52 காற்றாலைகளைப் பொருத்த முயற்சிப்பதாகத் தெரிய வருகிறது.

“நாம் மிகப் பெரும் ஆபத்தைச் சந்தித்துள்ளமை பலருக்கும் தெரியாது. புதிதாக நிறுவப்படவுள்ள காற்றாலைகள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலேயே பொருத்தப்படவுள்ளன. மக்கள் குடியிருப்புகள் பறிபோகும் அவலம் காத்திருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு எதிரான போராட்டங்கள், மக்களின் வாழ்வியலைத் தக்கவைத்துக் கொள்வதற்கான முயற்சிகளேயன்றி வேறில்லை” என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மார்கஸ் தெரிவித்தார்.




காற்றாலைகளின் இயக்கம் பாரிய இரைச்சலை ஏற்படுத்தக் கூடியது. அவ்வாறான திட்டமொன்று மக்கள் குடியிருப்புகளுக்கு அருகாமையில் வருவது மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் மூலம் மன்னார் தீவு மக்களின் ஜீவனோபாயமும் கேள்விக்குறியாகியுள்ளது.

பனை மரங்கள் இந்த மக்களின் வாழ்வாதாரத்தில் பிரதான பங்கு வகிக்கின்றன. பனையை மையமாகக் கொண்ட உற்பத்திகள் மூலம் பெருமளவான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அத்தோடு, பனை மரங்கள் மன்னார் தீவின் நிலக்கீழ் நீர் ஓட்டத்தையும் ஸ்திரப்படுத்துகிறது.

இவ்வாறு இருக்கையில் இந்தத் திட்டங்களுக்காக ஆயிரக் கணக்கான பனை மரங்கள் அழிக்கப்படும் அவதானம் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். “எமது வீட்டிற்கு மதில் அமைக்கவும் கூரை போடவும் பனை மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளன. ஆனாலும், இந்தத் திட்டத்திற்காக ஆயிரக்கணக்கான பனை மரங்களை அழிக்க எத்தனிக்கின்றனர்” என ஒரு முதியவர் முணுமுணுக்கிறார்.

காற்றாலைகள் ஒவ்வொன்றையும் இணைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள பாதை மூலம் மன்னார் வெள்ள அனர்த்தங்களை எதிர்கொண்டுள்ளது. குறித்த பாதை நிலத்தில் இருந்து 1 மீட்டர் அளவு உயரமாக இருப்பதால் நீர் வடிந்தோடும் அமைப்புகள் தடைப்பட்டுள்ளன. இதனால் முன்னெப்போதும் இல்லாத வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு, விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்குவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதுதொடர்பாக மன்னார் மாவட்ட பெண்கள் ஒன்றியத்தின் தலைவி மகா லக்ஷ்மி கருத்துத் தெரிவிக்கையில், “தீவில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள காற்றாலைகளால் நாம் பல்வேறு இன்னல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றோம். வெள்ளத்தால் பெண்களின் வீட்டுத் தோட்டங்கள் நாசமடைந்து போனது. அபிவிருத்தித் திட்டங்கள் எமது சமூக, பொருளாதார, மனித உரிமைகளைப் பாதிக்கும் விதத்தில் இருக்கக் கூடாது” என்றார்.



மன்னார் தீவானது, ஐக்கிய நாடுகள் புலம்பெயர் உயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பான பேரவையின் பிரதானமான நாடாக இலங்கை விளங்குகிறது. இதற்கான காரணம், ஆண்டுதோரும் 30 க்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து 250க்கும் அதிகமான பறவை வகைகள் இலங்கைக்குப் புலம்பெயர்வதனாலாகும். வருடாந்தம் இலங்கைக்கு 15 இலட்சம் பறவைகள் வருவதாகக் கணிக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் பிரதேசத்திற்கு மாத்திரம் 10 இலட்சம் பறவைகள் வருகை தருகின்றன.

இவ்வாறு வருகின்ற பறவைகளின் பயணப் பாதையும் இருப்பிடங்களும் பாதிப்படைவதாகவும், காற்றாலைகளின் இயக்கத்தால் பறவைகள் உயிரிழப்பதாகவும் சூழலியல் நீதிக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே தெரிவிக்கிறார். இந்தியாவின் அதானி நிறுவனத்தின் திட்டத்தில் பறவைகளுக்கான தாழ்வாரப் பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும் அவை, பெயரளவிலானது என்றும் அவர் விளக்குகிறார்.

மன்னார் பிரதேச மக்கள் அபிவிருத்தித் திட்டங்களை எதிர்ப்பவர்களல்ல. மாறாக, திட்டங்கள் தமது இருப்பையும் வாழ்வியலையும் பாதித்துவிடக் கூடாதென்று போராடுபவர்கள். இந்த முன்மொழிவுத் திட்டங்கள் தொடர்பாக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. எனினும், அறிக்கையில் மன்னார் வாழ் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்று சிவில் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. மக்களின் இருப்பு உட்பட பல்வேறு சூழலியல் காரணிகளையும் சவாலுக்கு உட்படுத்தும் அதானி நிறுவனத்தின் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் மன்னார் தீவுக்கு வெளியே கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதே, மக்களின் கோரிக்கையாகும்.



## மனநலமும் ஆலோசனையும் 20

# பயணம் தெளிவானால் பாதையும் தெளிவாகும்

நாம் வாழ்க்கையில் இலக்குகளுடன் அல்லது எதிர்பார்ப்புகளுடன் நகர்கிறோம்.

அப்படி நகர்ந்தாலும் சிலசமயங்களில் அடைய ஆசைப்படுவதை அடைய முடியாது போகும் சந்தர்ப்பங்களை சந்திக்கிறோம்.

இன்னும் சில சமயங்களில் நம்மால் அடைய வேண்டியவற்றில் கவனம் செலுத்த முடியாமல் தவிக்கிறோம்.

சில சமயங்களில் வாழ்க்கையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

நாம் என்ன செய்கிறோம் என்பதைச் சரியாக செய்யாததனாலும் என்ன செய்ய வேண்டும் என்பதை சரியாகத் தெரியாததனாலும் நாம் இவ்வாறான நிலைகளை சந்திக்க நேரிடுகிறோம்.

எங்கள் பார்வையும் பயணமும் தெளிவான நோக்கம் கொண்டதாக இருந்தால் மட்டுமே நாங்கள் திசை திரும்பாமல் போக வேண்டிய இடத்துக்கு போய் சேரலாம்.

சரியானதைச் செய்வதிலிருந்தும் பொருத்தமானதை தெரிவு செய்வதில் இருந்தும் மட்டுமே சிறந்த முடிவுகளை எடுக்கத் தேவையான அறிவு எமக்குள் உருவாகிறது.

சரியானதை தெரிவுசெய்து, சரியானதைச் செய்வதன் மூலம் வரும் முடிவுகள் மிகவும் தெளிவாக இருக்கும்.

நாங்கள் தொடர்ந்து சரியானதைச் செய்வதற்கு எங்களை பழக்கப்படுத்திக் கொள்ளும்போதும் சரியானதை செய்வதற்கு தேவையான ஆதாரங்களை தேடும் போதும் எங்கள் பயணத்தின் முடிவெல்லையை மிகவும் இலகுவாக அடையலாம்.

வெற்றியை நோக்கிய பயணம் என்பது நாம் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அடுத்த படியை அடைவதற்காக உழைக்கும் செயல்முறையாகும், நாம் முன்வைக்கும் ஒவ்வொரு அடியும் எங்களைத் தூண்டி, தவறாமல் முன்னேறத்தை அடைய ஊக்குவித்துக் கொண்டே இருக்கும்.

வெற்றியை நோக்கி போகும் பயணம் ஒருபோதும் முடிவடையாத ஒரு அற்புதமான பயணம்.

அந்த பயணத்திற்கான உறுதியான அத்திவாரம் சரியானது எது, சரியானதை செய்வது எப்படி என்பதை தெரிவு செய்வதாகும்.

பயணத்தின் வெற்றி, நாம் ஏன் பயணிக்கிறோம் என்பதைப் பொறுத்தும் பயணத்தின் தன்மையை சரியாக புரிந்து கொள்வதிலும் தங்கியிருக்கிறது.

சரியான பதிலைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் சரியான கேள்வியைக் கண்டறிவோம் என்பதில் உறுதியாக இருப்போம்....!

போக வேண்டிய சரியான பாதையை கண்டு பிடித்து அந்தப் பாதையில் பயணம் செய்வோம்...!

பழைய சிந்தனை முறைக்குள் விழுந்து விடாமல் வெற்றியைப் பற்றி வித்தியாசமாக சிந்திப்போம்....!

இலக்கின்றி அலைவதற்குப் பதிலாக, நமது இலக்கையும் நோக்கத்தையும் புரிந்து பயணிப்போம்...!

"எங்கு செல்ல வேண்டும் என்று தெரியாத மாலுமிக்கு சாதகமான காற்று கிடைப்பதில்லை"



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# பிரியாதிருக்க இரு இனங்களைத் தமிழால் ஒருங்கிணைத்த முன்னோடி நிகழ்வு





(அஷ்ரப் ஏ சமட்)

"சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னிருந்த நிலையை இன்று இங்கு நான் காண்கின்றேன்" நேற்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் நூல்களின் வெளியீட்டு விழாவில் தலைமை தாங்கிப் பேசுகையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் முனைவர் க.இரகுபரன் அவர்கள் இனபேதமற்று ஒரேமொழிபேசும் இந்துக்களும், முஸ்லிம்களும் நிறைந்த அவையில் இதனைக் குறிப்பிட்டார்.

இனங்களை கடந்த நிலையில் மொழிதமிழால் இணைந்த அன்பு இதயங்களாய் காத்திரமான இலக்கிய ஆளுமைகள் வரவுதந்த சிறப்பை (18) கொழும்பு தமிழ்ச்சங்க வினோதன் மண்டபத்தில் அமைதியான அழகான நூல்வெளியீடு நடந்தேறியது.

சிவாகம கலாநிதி. வைத்தீஸ்வரக் குருக்களின் ஆசியுரையுடன் தொடங்கிய இவ்விழாவிற்கு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர் பேசுகையில். "இன்று பல்துறையிலும் சிறந்து விளங்கும் இஸ்லாமியர்கள், தமது தாய்மொழி தமிழைக் காப்பதிலும் முதன்மை பெறுவதை நான் காண்கின்றேன்" எனவும் விதந்துரைத்தார். நூலாசிரியரின் பேத்தி செல்வி நதீதா ஸமா ஸமத் வரவேற்புரை செய்ய தலைவர் உரையின்பின் எழுத்தாளர் திருமதி வசந்தி தயாபரன் அவர்கள் தொடக்க உரையையும், தமிழ்மாமணி அல்அசூமத் நூல் அறிமுகமும் செய்தனர்.

இன்றைய காலகட்டத்தில் கவிதையை எழுதுபவர்கள் எந்த பயபக்தியுமில்லாமல் கவிதை எழுதத்துணிகின்றனர். அவர்கள் தாம் எழுதுவதெல்லாம் கவிதை என இந்த சமூகம் ஏற்க வேண்டும் என விரும்புகிறார்கள். கவிதை எல்லோராலும் எழுதப்பட முடியாது.

அதற்கென்ற முறையோடும் மரபோடும் எழுதப்பட வேண்டும். என தனது உணர்வுகளை இச்சமூகத்திற்கு வலியுறுத்தி கூறியதோடு காப்பியக்கோ ஜின்னா ஷரிபுதீன் அவர்களுடைய ஆழமான கவியாக்க வெளிப்பாடுகளை பற்றியும் உரையிலே சிறப்பித்திருந்தார். செல்வி தேஜஸ்வினி பிரணவன் நிகழ்வை அழகாக தொகுத்து வழங்கினார். நிறையவே கலை இலக்கிய நண்பர்கள் இந்நிகழ்வில் பங்குகொண்டு சிறப்பித்தனர் காத்திரமானநல்லநூல் வெளியீடு என்பதுகுறிப்பிடத்தக்கது.




# ரமழானும் சுகாதாரமும்

பயாஸா பாஸில்

இஸ்லாத்தில் எந்தவொரு வணக்க வழிபாடையும் செயற்பாடையும் நோக்கினால் அதில் மனிதனின் நலனுக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

நோன்பைப் பற்றி அல்லாஹு தஆலா அல்குர்ஆனில், "நோன்பு நோற்பதே உங்களுக்கு நன்மையாகும் (என்பதை உணர்வீர்கள்)" (2:184) என்று குறிப்பிட்டுள்ளான்.

ரமழானில் கடைபிடிக்க வேண்டிய ஆரோக்கியம் தொடர்பான வழிகாட்டல்கள்:

1. எமது இப்தார் மற்றும் ஸஹ்ர் உடைய நேரங்களில் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை பின்பற்றல்.



2. ஒவ்வொருவரது உடல் ஆரோக்கிய நிலைக்கேற்ப போதுமான தூக்கத்தில் கவனம் செலுத்தல்.

3. எமது வீட்டிலுள்ள சிறார்களும் எம்முடன் இணைந்து நோன்பு நோற்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பர்.

எனவே, அவர்கள் நோன்பு நோற்கும் விடயத்தில் அவர்களின் ஆரோக்கியத்தையும் கவனித்துக் கொள்ளல்.

5. கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் பெண்கள் ஆகியோருக்கு நோன்பு நோற்பதில் சில சலுகைகள் இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ளன.

6. நோன்பு நோற்க சக்தியற்ற வயோதிகர்களுக்கும் நிரந்தர நோயாளிகளுக்கும் நோன்பு நோற்காமல் இருப்பதற்கு மார்க்கத்தில் அனுமதி இருக்கின்றது. அதேநேரம் அந்த ஒவ்வொரு நோன்புக்காகவும் அவர்கள் ஒரு (முத்) அரிசியை ஃபித்யாவாக கொடுக்க வேண்டும். ஒரு (முத்) என்பது 600 கிராம் ஆகும். எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா இந்த ரமழான் மாத நோன்பை ஆரோக்கியமாகவும் உற்சாகமாகவும் நோற்பதற்கு அருள் புரிவதோடு, நமது நாட்டையும் உலக மக்களையும் நாட்பட்ட, கொடிய நோய்களிலிருந்து பாதுகாத்தருள்வானாக...!!

# வெங்காயத்தின் வலிமை

வெள்ளைப் பூண்டுடன் சேர்ந்து வல்லமை மிக்க, புகழ்மிக்க மருந்தாக வெங்காயம் காணப்படுகின்றது. ஜலதோஷத்தை ஏற்படுத்தும் நச்சு நுண்மங்களையும் , புற்று நோய்களையும் இதய நோய்களையும் தடுத்து நிறுத்துகிறது. நோய் தொற்றை தடுத்து உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

வெங்காயத்தில் உள்ள எலிலின் என்ற இரசாயன பொருள் தான் பாக்டீரியாக்கள், நச்சு நுண்மங்கள், காளான் போன்றவை உடலில் சேராமல் தடுக்கின்றன. இத்துடன் புற்றுநோய் கட்டிகள் வளராமலும் தடுக்கின்றன.



# மரக்கறி பழங்களை பாதுக்காக்க வேண்டுமா?



வெயில் காலம் என்பதால் வீட்டுக்கு வாங்கி வரும் மரக்கறிகளும் சரி , பழங்களும் சரி விரைவில் வாடி போய் விடுகின்றது. இரண்டு மூன்று நாட்கள் இவை ப்ரஷ்ஷாக இருக்க வேண்டும் என்றால் வாழைப்பழத்தின் காம்பை பொலித்தீன் பையில் சுற்றி வைக்க வேண்டும்.

தண்ணீரில் எலுமிச்சை சாற்றை கலந்து அது ஸ்ட்ராபெரியை போட்டு வைத்தல் இரண்டு மூன்று நாட்களுக்கு புதிதாக வாங்கியதைப் போலவே இருக்கும். கீரை வகைகளை கடதாசி பேப்பரில் சுற்றி பொலித்தீன் பையில் போட்டு வைத்து விடுங்கள். காலிபிளவர் ப்ரோக்கோலி போன்றவற்றை சில்வர் பேப்பரில் சுற்றி வைக்கலாம்.



அரபாத் பஹுர்தீன்

# ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ணம் 2024:

# இறுதியில் மோதும்

## ஹமீட் அல் ஹுஸைனி - சென் தோமஸ்







கொழும்பு ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரியின் பழைய மாணவர்களாகிய 80களின் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டுவரும் இலங்கையின் உதைப்பந்தாட்டத்தில் முன்னனியில் உள்ள 20 பாடசாலைகளுக்கு இடையிலான 14ஆவது ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ணம்-2024 தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி மற்றும் கல்கிஸ்ஸை புனித தோமஸ் கல்லூரி அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ளது.




### முதல் 20 பாடசாலை அணிகள் பங்கேற்பு

இலங்கை பாடசாலை உதைப்பந்தாட்டத்தில் முதல் 20 இடங்களிலுள்ள பாடசாலை அணிகள் இத் தொடருக்கு உள்வாங்கப்பட்டிருந்தது.

இத் தொடர் அனைத்தும் விலகல் முறைப் போட்டிகளாக இடம்பெற்றிருந்தது. அதற்கமைய குழு ஏ இல் நீர்கொழும்பு மேரிஸ்டெல்லா, சென் தோமஸ், பேருவளை அல் /ஹுமைசரா, டர்மதுத்த கல்லூரி, சென் பெனடிக்ஸ் கல்லூரி, நீர்கொழும்பு சென் மேரிஸ் கல்லூரி, அல் முபாரக் கல்லூரி, ஆனந்தா கல்லூரி, நீர்கொழும்பு அல் ஹிலால் கல்லூரி மற்றும் ஏறாவூர் அலிஹார் மத்திய கல்லூரி என்பன இடம்பெற்றிருந்தன.

அதேபோல் குழு பீ இல் தாருஸ்ஸலாம் கல்லூரி, டி மசனொட் கல்லூரி, ரோயல் கல்லூரி, ஹேட்வே சர்வதேச கல்லூரி. வெஸ்லி கல்லூரி, சென் ஜோஸப் கல்லூரி, சென் பீடர்ஸ் கல்லூரி, இசிப்பத்தான கல்லூரி, மாவனல்ல பதுரியா மத்திய கல்லூரி மற்றும் ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி ஆகியன அங்கம் பெற்றன.

இருப்பினும் கடந்த வருடம் 20 வயதுக்குட்பட்ட பாடசாலை உதைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் கொழும்பு ஸாஹிரா கல்லூரியை வீழ்த்தி முதல் முறையாக சம்பியன் மகுடம் வென்ற ஏறாவூர் அலிஹார் மத்திய கல்லூரி இத் தொடரில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



### விறுவிறுப்பாய் அமைந்த காலிறுதி ஆட்டங்கள்

முதலாம் மற்றும் இரண்டாம் சுற்றுக்களின் முடிவில் குழு ஏ இல் சென் பெனடிக்ஸ் கல்லூரி, செக் தோமஸ் கல்லூரி, நீர்கொழும்பு அல் ஹிலால் கல்லூரி மற்றும் சென் மேரிஸ் கல்லூரி ஆகிய 4 அணிகள் காலிறுதி போட்டிக்குத் தகுதி பெற்றன. அதேபோல் குழு பீ இல் இருந்து ரோயல் கல்லூரி, ஹேட்வே சர்வதேச கல்லூரி, ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி மற்றும் சென் ஜோஸப் கல்லூரி ஆகியன காலிறுதிக்குத் தெரிவாகின.

இதற்கமைய இடம்பெற்ற முதல் போட்டியில் ரோயல் கல்லூரியை எதிர்த்தாடிய ஹேட்வே சர்வதேச கல்லூரி 5:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றி பெற்று அரையிறதிக்குள் நுழைந்தது. பின்னர் இடம்பெற்ற 2ஆவது காலிறுதி ஆட்டத்தில் சென் பெனடிக்ஸ் மற்றும் செக் தோமஸ் கல்லூரிகளுக்கிடையிலான போட்டி 1:1 என சமநிலை அடைய பெனால்டி உதையின் மூலம் 2:0 என வெற்றி பெற்றது சென் தோமஸ் கல்லூரி. அடுத்து இடம்பெற்ற 3ஆவது காலிறுதி ஆட்டத்தில் நீர்கொழும்பு அல் ஹிலால் கல்லூரி அணி 5:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் சென் மேரிஸ் கல்லூரியை வீழ்த்தியது. 4ஆவதும், இறுதியுமான காலிறுதி ஆட்டத்தில் ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி அணி, சென் ஜோஸப் கல்லூரி அணியை 3:0 என வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது.



### பரபரப்பிற்குப் பஞ்சமில்லா அரையிறுதி

14ஆவது ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ணத் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் நீர்கொழும்புஅல் ஹிலால் கல்லூரி அணியும் சென் தோமஸ் கல்லூரி அணியும் தோதின. இப்போட்டி சுகததாச மைதானத்தல் இடம்பெற்றது. இப் போட்டியின் முதல் பாதியில் அல் ஹிலால் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தியது. இதனால் போட்டியின் 24ஆவது நிமிடத்தில் முஹம்மது அரபாத் முதல் கோலை உட்செலுத்த முன்னிலை பெற்றது அல் ஹிலால் கல்லூரி. இருப்பினும் 36ஆவது நிமிடத்தில் சென் தோமஸ் சார்பில் முக்தார் கோல் கணக்கை ஆரம்பித்து வைக்க முதல் பாதி ஆட்டம் 1:1 என சமநிலை பெற்றது.

பின்னர் தொடர்ந்த 2ஆவது பாதி ஆட்டத்தில் சென் தோமஸ் கல்லூரி வீரர்கள் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் போட்டியின் 55ஆவது நிமிடத்தில் ராஜதுரையும், 66ஆவது நிமிடத்தில் டயஸும், 69ஆவது நிமிடத்தில் ஜேசுரனும் கோல்களை உள்ளனுப்ப 4:1 என முன்னலை பெற்றது சென் தோமஸ் கல்லூரி. பின்னர் ஆட்டத்தின் 36ஆவது மற்றும் 86ஆவது நிமிடங்களில் முதல் கோலை பதிவு செய்த முக்தார் அடுத்தடுத்து கோல்களை அடித்து ஹெட்ரிக் பதிவு செய்ய, ஆட்ட நேர முடிவில் 6:1 என இலகு வெற்றி பெற்ற சென் தோமஸ் கல்லூரி இறுதிக்குள் முதல் முறையாய் நுழைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் போட்டிகளை நடாத்தும் கொழும்பு ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி அணி, கேட்வே சர்வதேச கல்லூரியை எதிர்த்தாடியது. இப்போட்டியின் முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இருப்பினும் ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் முஹம்மது அர்ஹம் அடித்த அசத்தலான கோலால் முன்னிலை பெற்றது ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி. பின்னர் போட்டியின் 31ஆவது நிமிடத்தில் பந்துடன் எதிரனி கம்பம் நோக்கிச் சென்ற ரெ்ஹம் தன் பங்கிற்கு 2ஆவது கோலையும் உட்செலுத்த முதல் பாதியில் 2:0 என முன்னலை பெற்றது ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி.

ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரியின் ஆத்திக்கத்துடன் தொடர்ந்த 2ஆவது பாதி ஆட்டத்தில் கெட்வே சர்வதேச கல்லூரி வீரர்கள் கோலுக்கான முயற்சியில் ஈடுபட்ட போதிலும் அது பயனில்லாமல் போனது. இருப்பினும் போட்டியின் 60ஆவது நிமிடத்தில் ஹுசைன் பெற்றுக் கொடுத்த கோலுடன் ஆட்ட முடிவில் 3:0 என வெற்றி பெற்ற கொழும்பு ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி மீண்டும் இறுதிப் போட்டிக்குள் கால் பதித்தது.

### எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் இறுதி ஆட்டம்

14ஆவது ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ணத் தொடரில் தற்சமயம் வரை இடம்பெற்று முடிந்துள்ள போட்டிகளில் எந்தவொரு தோல்விகளையும் சந்திக்காத ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரி மற்றும் கல்கிஸ்ஸை சென் தோமஸ் கல்லூரி ஆகிய இரண்டும் தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் மோதவுள்ளன. இத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதத்தின் முதலாம் வாரத்தில் கொழும்பு சுகததாச மைதானத்தில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இவ் இறுதிப் போட்டிக்கு சிறப்பு அதீதியாக இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்கேற்கவுள்ளார் எனவும் இப் போட்டி மின்னொளியில் இடம்பெறும் எனவும் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

### அதிக கோல்கள் பெற்ற வீரர்கள்

இத் தொடரில் இதுரையில் இடம்பெற்று முடிந்த போட்டிகளுக்கு அமைய கல்கிஸ்ஸை சென் தோமஸ் கல்லூரியின் முன்கள வீரரான முஹம்மது முக்தார் 5 கோல்களை உட்செலுத்தி முதலிடத்தல் உள்ளார். அவரைத் தொடர்ந்து ஹமீத் அல் ஹுசெய்னி கல்லூரியின் வீரரான அத்தீக் மற்றும் அர்ஹம் ஆகியோர் தலா 4 கோல்களுடன் 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.